Registered as a News Paper in Sri Lanka  பக்கங்கள்: 06  விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM  PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01  பிரமோதூத ஹூ வைகாசி மீ 23 ஆம் உ  புதன்கிழமை  (06 - 06 - 1990)  ஹிஜ்ரி 1410  ஜுல்ஹஜ் 12  ஓசை 108

## தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பற்சேவை தற்போதைக்கு இல்லை

(சென்னை)

மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான கப்பற்சேவை அண்மையில் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லையென சென்னையில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் நடைபெற்ற இலங்கை - இந்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் சென்னை - கொழும்பு பயணிகள் கப்பற்சேவை தொடங்கவுள்ளதாக இலங்கை அரசு அறிவித்ததோடு இதில் பயணம்செய்ய விரும்புவோர் முன்பதிவு செய்துகொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை காரணமாக ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து நிறுத்தப்பட்ட பயணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் நடைபெறாது

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி இணைப்பு துண்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் சட்ட விரோத தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

ஒரே இலக்கத்தின் கீழ் இரு இணைப்பு பயன்படுத்தப்படுவதை தொலைத்தொடர்பு திணைக்கள அதிகாரிகள் திடீர் பரிசோதனையில் கண்டுபிடித்துள்ளனர்.

மேற்படி சட்ட விரோத இணைப்புகளுக்கு திணைக்கள ஓரிரு ஊழியர்கள் உடந்தை என விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக திணைக்கள அதிகாரியொருவர் கூறினார். (37)



தியாகி சிவகுமாரன் சிலை திறப்பு விழா நேற்று மாலை உரும்பராயில் நடைபெற்றபோது மேடையில் கவிஞர் காசிஆனந்தன் கோ.மகேந்திரராசா (மாத்தையா) சிவகுமாரனின் தாயார், டொமினிக் ஆகியோர் அஞ்சலி செலுத்துவதையும் சிலையைத் திறந்து வைத்து திரு. மகேந்திரராசா உரையாற்றுவதையும் வைபவத்தில்கலந்துகொண்டதிரளான கூட்டத்தில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு சிவா)

## பல். கழகங்கள் மூடப்படவில்லை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களும் விடுமுறைக்காக மூடப்படவில்லை என பல்கலைக்கழக மானியங்கள் குழுத்தலைவர் பேராசிரியர் ஏ. வி. ஆர். அலுவிகாரா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பு பத்திரிகைகள் சிலவற்றில் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளதாக வந்த செய்தியினை அடுத்தே இவ் அறிக்கையினை மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் விடுத்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக் கழகங்களும் வழமை போல் இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரபா - பிரேமா சந்திப்பு இப்போதைக்கு இல்லை!

## 6 வது திருத்த சட்டம் நீக்கும் மசோதா ஈரோஸால் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

எமது பேச்சுவார்த்தைகளின் விளைவாகவும், தற்சமயம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளைக் கருத்திற்கொண்டும், இலங்கை அரசு உடன் நடவடிக்கை எடுக்கும் எனக் கருதுவதால் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கான 6-வது திருத்தத்தை நீக்கக் கோரும் தனிநபர் மசோதாவை இவ்வாரம் சமர்ப்பிப்பதை நாம் தாமதப் படுத்தியிருக்கிறோம் ரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ள இக்கால அவகாசம் பயன் படும் என்று

(6ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிள் சவாரிக்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

சைக்கிளில் வெளிச்சம் இல்லாமல் செல்வது லைசன்ஸ் இல்லாமலிருப்பது, பிரேக்இல்லாமலும் வீதிகளில் சமமாக சைக்கிளில் சவாரி செய்வது குற்றச்செயல்களாகக் கருதப்பட்டு ஜூலை முதல் தேதியிலிருந்து இவற்றைக் கடுமையாக அமுல்படுத்தப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 20 டிப்போக்களில் அதிகாரிகள் கடமையில் தவறியுள்ளனர்

(கொழும்பு)

இருபது பஸ்டிப்போக்களில் அதிகாரிகள் சிலர் கடமையில் தவறாகநடந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் யூ. எல். பாரூக் தெரிவித்துள்ளார்.

சில டிப்போக்களில் சில ஊழியர்கள் காலையில்வந்து கையொப்பம் வைத்துவிட்டு

யான காலங்களிலும் தமது உயிரையும்பொருட்படுத்தாது மக்களுக்கு சேவையாற்றியதற்கு நன்றி கூறவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## உ. அ. அதிபருக்கு வானொலித்

## மாகாணசபைத் தேர்தலுக்கு பின்பே சந்திப்பு சாத்தியமாகுமாம்

(யாழ்ப்பாணம்)

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்திப்பதற்கும் அவருடன் கலந்துரையாடுவதற்கும் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேம

## நேற்றுப் பாராளுமன்றத்தில் மூன்று சட்ட மூலங்கள்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் கூடிய போது மூன்று வெவ்வேறு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பாதுகாப்புராஜாங்க

தொழில் துறை அமைச்சரான ரஞ்சன் விஜயரட்ணா 1975ம் ஆண்டு 14ம் இலக்க இலங்கை தேயிலை சபை சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் ஒன்றை சமர்ப்பித்தார்.

வரும் பேச்சுவார்த்தைகளைக் கருத்திற்கொண்டும், இலங்கை அரசு உடன் நடவடிக்கை எடுக்கும் எனக் கருதுவதால் ... ரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ள இக்கால அவகாசம் பயன் படும் என்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# இப்போதைக்கு இல்லை!

லாமலும் வீதிகளில் சமமாக சைக்கிளில் சவாரி செய்வது குற்றச்செயல்களாகக் கருதப் பட்டு ஜூலை முதல் தேதியிலிருந்து இவற்றைக் கடுமையாக அமுல்படுத்தப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 20 டிப்போக்களில் அதிகாரிகள் கடமையில் தவறியுள்ளனர்

(கொழும்பு)

இருபது பஸ்டிப்போக்களில் அதிகாரிகள் சிலர் கடமையில் தவறாகநடந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் யூ. எல். பாரூக் தெரிவித்துள்ளார்.

சில டிப்போக்களில் சில ஊழியர்கள் காலையில்வந்து கையொப்பம் வைத்துவிட்டு வெளியே போய்விடுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பல பஸ்கள்எரிக்கப்பட்டன. இதனால் பலகோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அரசு போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்கமாட்டாது.

சில ஊழியர்கள் நெருக்கடியான காலங்களிலும் தமது உயிரையும்பொருட்படுத்தாது மக்களுக்கு சேவையாற்றியதற்கு நன்றி கூறவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## உ. அ. அதிபருக்கு வானொலித் தொலைபேசி

(மட்டக்களப்பு)

வெல்லாவெளி உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கு வானொலி தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரப் பாதுகாப்பிற்கு 88கோடிரூபா வெளிநாட்டு உதவி

(கொழும்பு)

இலங்கையின் கரையோரத்தை பாதுகாப்பதற்கான இரு திட்டங்களுக்கு 88கோடி ரூபா வெளிநாட்டு உதவி வழங்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் கப்பற்துறை அமைச்சர் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி, டென்மார்க் ஆகியன இந்த உதவியை வழங்கியுள்ளன.

நீர்கொழும்பு, மொறட்டுவை கரையோர பாதுகாப்புத் திட்டங்களுக்கு இந்நிதியில் இருந்து 50 கோடி ரூபா செலவிடப்படும் என்று இவ் அமைச்சர் தெரிவித்தார்.

## சிங்களப் பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பித்தல்

(கொழும்பு)

அரசின் புதிய கல்விக்கொள்கைக்கு ஏற்ப குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் உள்ள சிங்களப் பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பிக்கப்படவுள்ளது.

வடமேல் மாகாண மாகாணசபை இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள சிங்களப் பாடசாலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைத் தேர்தலுக்கு பின்பே சந்திப்பு சாத்தியமாகுமாம்

(யாழ்ப்பாணம்)

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்திப்பதற்கும் அவருடன் கலந்துரையாடுவதற்கும் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா மிக ஆவலாக இருப்பதாகவும் விரைவில் இச்சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென நீதி அமைச்சர் ஜனாப் ஹமீத் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் ளை கேட்டுக்கொண்ட போதிலும் வடக்கு கிழக்கு மாகாண சபைத்தேர்தல் முடிந்து விடுதலைப் புலிகள் தேர்தல் மூலம் ஆட்சி நிர்வாகப் பொறுப்பை ஏற்றபின்னரே இரு தலைவர்களும் சந்திக்க முடியுமென்று மக்கள் முன்னணித் தலைவர்கள் உறுதியாகத் தெரிவித்துவிட்டதாக புலிகளின் வட்டாரங்களிலிருந்து நம்பகரமாகத் தெரியவருகிறது.

தலைவர் பிரபாகரனை ஜனாதிபதி பிரேமதாசா சந்தித்துப் பேசுவதற்கு மிக்க ஆவல் கொண்டிருப்பதாகக் கொழும்பில் நடந்த அரசு-புலிகள் சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து இச்சந்திப்பு விரைவில் யாழ் நகரில் நிகழும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் அரசியலமைப்பின் ஆறாவது சட்ட திருத்த நீக்கமும் வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்துவதும் காலதர்மதமாவதாலும், தமிழீழத்தில் இன்று நிலவும் அரசியல் சூன்ய நிலையில் இரு தலைவர்களும் சந்தித்துப் பேசுவதில் அர்த்தமில்லையென்று புலிகள் வட்டாரங்கள் கருதுகின்றன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றுப் பாராளுமன்றத்தில் மூன்று சட்ட மூலங்கள்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் கூடிய போது மூன்று வெவ்வேறு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது,

பாதுகாப்புராஜாங்க அமைச்சரும், பெருந்தோட்டதொழில் துறை அமைச்சருமான ரஞ்சன் விஜயரட்ணா 1975ம் ஆண்டு 14ம் இலக்க இலங்கை தேயிலை சபை சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் ஒன்றை சமர்ப்பித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரின் சுற்றுப்புறசூழலை பாதுகாக்கும் பொருட்டு தமிழீழ ஆய்வு நிறுவனமும் யாழ்மாநகரசபையும் இணைந்து நாளை வியாழக்கிழமை மாநகரசபை ஆணையாளர் திரு. வீ. பி.பாலசிங்கம் அவர்களின் தலைமையில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இருந்தும்தற்போதுயாழ்மாநகரசபைவைத்தியசாலைவீதியில் மரம் நடுகை திட்டம் அமுல்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளதும் குறிப்பிடதக்கதாகும். (அ)

## கல்விக் கொள்கையை அமுலாக்க குழு நியமனம்

(கொழும்பு)

தேசியகல்விக்கொள்கையை நாட்டில் அமுலாக்க குழுவொன்றை நியமிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கு தேவையான சகல

(6ஆம் பக்கம் பார்க்க)

## மினி வான் கடத்தல் புலிகளிடம் உதவி

(வவுனியா)

வவுனியா இலங்கைப் போக்குவரத்துச்சபை டிப்போ அருகில் கடந்த திங்களன்று மினிவான் ஒன்று ஆயுதம் தாங்கிய கோஷ்டியினரால் கடத்திச் செல்லப்பட்டது.

மினிவானின் உரிமையாளர் வவுனியா இராணுவ முகாமில் செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, இராணுவத்தினர் மேற்படி 5ஸ்ரீ 9713 இலக்கத்தினையுடைய மினிவானைக் கண்டு பிடித்துத் தரும்படி விடுதலைப் புலிகளைக் கேட்டுள்ளனர். (தி)

## எமது போராட்டம் எழுச்சியுடன் வீறுகொண்டுஎழவேண்டும் - மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

எமது விடுதலைப்போராட்டம் இனி வரும் காலத்திலே மிக எழுச்சியுடன் வீறுகொண்டு எழ வேண்டும் நாம் எமது போராட்டத்தில் இனி மேல்தான் பெரும் பாகத்தை கடக்க வேண்டும்.

என தியாகி சிவகுமாரனின் சிலையை திறந்து வைத்து உரையாற்றும்பொழுது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) தமிழீழ மக்களை வேண்டிக் கொண்டார்.

மேலும் தலைவர் மாத்தயா சிவகுமாரனின் போராட்ட வாழ்க்கை பற்றி நினைவு கூருகையில்,

1974ஆம் ஆண்டு இதே தினத்தில் எமது விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக இருந்து உயிர்த்தியாகம் செய்த அண்ணன் சிவகுமாரனை இந்த மண் ஒரு வீரனாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதுதான் இந்த மண்ணின் உணர்வு, இதுதான் இந்த மண்ணின் மகிமை என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் ஒரு போராட்டத்தை புரிந்து கொள்வதும் அந்த போராட்டத்தில் ஈடுபடும் போராளிகளை புரிந்து கொள்வதும் அவர்களது தலைமையை ஏற்றுக் கொள்வதும் இன்று இந்த மக்கள் அண்ணன் சிவகுமாரன் அவர்களுக்கு மீண்டும் சிலை எழுப்பியதன் மூலம் நிரூபித்து காட்டியுள்ளனர் என்றார்.

யாழ் மாவட்ட விடுதலைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கு மாகாணசபை

## பொலிஸ் படைக்கு 457 பேர் தெரிவு இம்மாத மத்தியில் பயிற்சி ஆரம்பம்

(திருக்கோணமலை)

அண்மையில் வட-கிழக்கில் நடைபெற்ற பொலிஸ் படைக்கு ஆட்களைச் சேர்க்கும் நேர்முகப் பரீட்சையில் முதற் கட்டமாக 457 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இரண்டு மாதப் பயிற்சி நெறி எதிர்வரும் 15ஆம் திகதி தொடங்கவுள்ளது. இதில் 32 பேர் உதவி பொலிஸ் அதிகாரிகள் ஏனையோர் கான்ஸ்டபிள்களாகும் என வட-கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ரி. ஈ. ஆனந்தராசா தெரிவித்தார்.

பயிற்சி நெறி யாழ்ப்பாணம் வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய ஐந்து இடங்களிலும் நடைபெறும். திருக்கோணமலையில் உதவி பொலிஸ் அதிகாரிகளுக்கு மாத்திரம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாரிய கைத்தொழில்களுக்கு திணைக்களக் காணிகள்

(யாழ்ப்பாணம்)

அரச திணைக்களங்களுக்குச் சொந்தமானதும், பயன் படுத்தப்படாததுமான காணிகள் பாரிய கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு வழங்கப் படவுள்ளன. இவ்வாறு யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

அரச திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகள் எதற்கும் பயன்படுத்தப் படாது வீணாக இருப்பதைக் கருத்திற்கொண்டு அவற்றில் தொழிற்சாலைகள், ஸ்தாபனக் கட்டடங்கள் போன்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழரின் பாதுகாப்பு புலிகளுடன் தொடர்புடையது - பாலகுமார்

(கொழும்பு)

இலங்கைத் தமிழரின் பாதுகாப்பு புலிகளுடன் தொடர்புடையது. புலிகள் ஆயுதம் தரித்திருப்பது தமிழ் மக்களுக்கு பலத்தைக் கொடுக்கின்றது. அரசுடன் அவர்கள் பேசும்போது பலமான நிலையில் இருந்துகொண்டு பேச்சுக்களை நடத்துகின்றார்கள். அவர்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் இலகுவில் ஏமாற்றி விட முடியாது. ஈழவர் ஜனநாயக மக்கள் முன்னணிச் செயலதிபர் திரு. பாலகுமார் கொழும்பில் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஆறாவது

(6ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு சேச் லேனில் நல்ல சுற்றாடலில் லுள்ள காணியும் நல்லூர் ராணி வீதியிலுள்ள காணியும் மன்னார் இலுப்பைக் கடவையிலுள்ள வயல் காணிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி நா. வ. கந்தையா அன் சன்ஸ், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு சந்தை, நல்லூர். (R 828)


# மண்டைதீவுஅல்லைப்பிட்டிபகுதியில் 'செல்வம் பறவைகள் சரணாலயம்'

(தீவுப்பகுதி)

கண்ணாப்பற்றை காடுகளும் வேறு கடற்தாவரங்களும் நிறைந்து விளங்கும் மண்டைதீவு அல்லைப்பிட்டி முக்கோணக் கடல் பிரதேசம் பறவைகள்சரணாலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இப்பிரகடனத்தை தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினர் வேலணை மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் நடைபெற்ற அல்லைப்பிட்டி, மண்டைதீவு பகுதி சிற்றூரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் வைத்து அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் - மண்டைதீவு வழியாக பிரயாணம் செய்வோருக்கு அழகுதரும் இயற்கை வளமாக இருக்கும் இப்பிரதேசம் வெளிநாட்டு, உள்நாட்டு பறவைகளின் வசிப்பிடமாக இருந்து வருகின்றது. யாழ்ப்பாண நகருக்கு மிகஅண்மையில் இவ்விடம்இருப்பதால் மக்கள் தமது பொழுது போக்கை போக்கவும், இலங்கையின் முக்கிய சுற்றுலா இடமாகவும் இப் பிரதேசம் விளங்கும்.

இந்த முக்கோண பறவைகள் சரணாலயப் பகுதிகளில் கடற்தாவரங்களை வெட்டுவதோ, சிப்பிகள் அகழ்ந்து எடுப்பதோ, ஊரிமண் ஏற்றுவதோ உடனடியாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் மீறுவோர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும். பறவைகள் சரணாலயப் பகுதியை அல்லைப்பிட்டி,மண்டைதீவு, மற்றும் தீவுப்பகுதி சிற்றூரவை உறுப்பினர்களும் கண்காணிப்பார்கள்.

## ரயில் விபத்து

(புதுடில்லி)

ஹைதராபாத் - பம்பாய் கடுகதி ரயில் நேற்று முன் தினம் இரவு விபத்துக்குள்ளானதால் ஏழுபேர்வரை உயிரிழந்தனர். ஐம்பதுபேர் காயமடைந்தனர்.

எதிராக வந்துகொண்டிருந்த மற்றொரு ரயிலுடன் இது மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

## பாம்புகடித்தது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் எஸ் விநாயக மூர்த்தி (வயது 38) என்பவரை பாம்பு ஒன்று தீண்டியது இவர் உடனடியாக அம்புலன்ஸ்மூலம் யாழ், போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டுவருகின்றார்.

## இரண்டு வருடங்களின்பின் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினால் விளையாட்டுப் போட்டிகள் நடந்து கொண்டிருந்த சமயம் மாணவர்கள் சுற்றிவளைக்கப் பட்டு அழைத்துச் செல்லப் பட்ட இரண்டு வருடங்களின் பின் மீண்டும்நேற்றுமுன் தினம் கரவெட்டி ஞானாசாரியாக் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

இல்லவிளையாட்டுப் போட்டி ளுக்கு இக்கல்லூரி அதிபர் திரு எஸ். சிற்றம்பலம் தலைமை தாங்கினார்.

கோட்டக்கல்வி அதிகாரிகள் கொத்தணி அதிபர் உட்பட விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி உறுப்பினர்களான செங்கதிர்,செல்வம்,குணம் ஆகியோரும் பங்குபற்றி உரையாற்றினார்கள். (லோ)

## நள்ளிரவில் சைக்கிள் திருடன்

(விசேடநிருபர்)

நள்ளிரவு, வீட்டில் பூட்டி வைத்த சைக்கிளை திருடன் தூக்கிப் போவதைப் பார்த்த பெண்கள் கூக்குரல் போட்டனர்.

திருடன் சைக்கிளை மறைவான இடத்தில்போட்டுவிட்டு ஓட்டம் பிடித்த சம்பவம் ஞாயிறு நள்ளிரவு யாழ். வண்ணார்பண்ணை மேற்கு நாவலடி ஒழுங்கையில் நடைபெற்றது.

## புல்லுமலை பஸ்சேவை சீராக நடைபெறுவதில்லை

மட்டக்களப்பு - பதுளை வழியாக காலை நேரத்தில் மட்டக்களப்பில் இருந்து பதுளைக்கு ஒரு இ. போ. ச. பஸ் வண்டியும் புல்லு மலையில் இருந்து மட்டக்களப்புக்கு ஒரு பஸ் வண்டியும் சேவைக்கு விடப்படுகிறது.

பிரதான நகரான மட்டக்களப்பிற்கு புல்லுமலை, கோப்பாய் வெளிபோன்ற ஊர்பயணிகளை ஏற்றியவுடன் பஸ் நிரம்பி விடுகிறது.

இதே வேளை மாதாந்த பருவ கால சீட்டுப் பெற்ற உறுகாமம், கித்தூர், மரப்பாலம், கரடியனாறு போன்ற கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் பஸ்ஸில் செல்ல முடியாத நிலையில் தனியார் வாகனத்தில் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று இப்பகுதி மாணவர்கள் கவலை தெரிவித்தனர். (29


## இன்றைய திரைவானில்

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6. 30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்
ஹாஸ்யச் சித்திரம்
**STUCK ON YOU**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(Colour)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-30, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
(Fantas ic Film, Suitable for Childrens)
**CRAZY JUNGLE ADVENTURES**
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
4-00 7-00 9-30
**A NIGHT ON THE TOWN**
8ஆம் திகதி முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசுவின்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது.

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.3
விஜயகாந், ரேகா,
செந்தில்
நடித்த
**சொல்வதெல்லாம் உண்மை**
(B 878

**ராஜா (யாழ்)**
தினசரி 4 00, 7 00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி,
கார்த்திக்
நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
**அபூர்வ சகோதரர்கள்**


## கோதுமை மா, பாண் விற்பனை வீழ்ச்சி


(யாழ்ப்பாணம்)

அரிசி, கோதுமை மா என்பன போதிய அளவு கையிருப்பிலுள்ளது. கோதுமை மா, பாண் ஆகியவற்றின்விற்பனை குறைந்துள்ளது.

இத்தகவலை யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் காலை உணவாக பெரும்பாலும் பாண் வாங்குவார்கள். ஆனால் பாடசாலையில் இலவச உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் பாண் வாங்குபவர்களின் எண்ணிக்கையும்குறைந்துவிட்டது. அதேவேளைபாடசாலைகளில் கோதுமை மாவில் செய்யும் உணவிலும் பார்க்க உள்ளூர்த் தானியங்களில் செய்யும் உணவிற்கே முன்னுரிமை வழங்கப் பட்டது. இதன் காரணமாக கோதுமை மாவின் விற்பனை குறைந்துள்ளது.

மேலும் அரிசி ஒரு கிலோ

## 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கந்தையா நவநிதி (பவான்)

தாயின் மடியில்: அண்ணன் அடியில்:

### இலங்கை பால் உற்பத்தி நிறுவன

## பால் உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை பால் உற்பத்தி நிறுவனத்தினரின் சகல பால் உற்பத்திப் பொருட்களின் விலைகளும்அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி பால், பட்டர். தயிர் (யோகட்) ஹைலண்ட் பால்மா, ஐஸ்கிறீம், தயிர் என்பனவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன

கடந்த 2ஆம் திகதியில் இருந்து இப்புதியவிலை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனம் அறிவித்துள்ளது.

ஹைலண்ட் பால் பக்கற் ஒன்றின் புதிய விலை ரூபா 6.25 சதம் பழைய விலை ரூபா 4.00 ஆகும். ஹைலண்ட் பால்மா ரூபா 38 00 (400 கிராம்) 250 கிராம் பக்கற் ரூபா 26.50 சதமாகும்.

27ரூபாவுக்கு விற்கப்பட்ட 200 கிராம் பட்டரின் விலை 31ரூபாவாகும். 200 கிராம் சீசின் விலை 50 ரூபாவாகும்.

மேலும் இந் நிறுவனத்தினரால் தயாரிக்கப்படும் போத்தல் பால், தயிர், ஐஸ்கிறீம், ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## கடல்படகு இயந்திரம் திருத்தும் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் கடல் படகு இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறியை 2-6-90 அன்று வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்.


கிராமத்தில் உள்ளவர்களுக்கும் கல்வி வசதி அளிக்க வேண்டியதே எமது முயற்சியாகும் என்றார்

மேலும் திரு ச. சுப்பிரமணியம் உரையாற்றும் போது, இப்பயிற்சி நெறிகளில் கற்ற அறுபது வீத மாணவர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றிருப்பது இத்திட்டத்தின்


## தேவை

உடைந்த வெள்ளைப் போத்தல் ஓடுகள் தேவை. எமது தொழிற்சாலைக்கு நேரில் கொண்டு வந்து தருபவர்களுக்கு ஒரு கிலோவுக்கு 1 ரூபா 10 சதம் வீதம் வழங்கப்படும்.

எமது தொழிற்சாலைக்காக எவராவது தமது இடங்களில் போத்தல் ஓடுகளைச் சேகரிக்கலாம். தகுதியானவர்களுக்கு முற்பணம் வழங்கப்படும். போத்



**கந்தையா நவநிதி (பவான்)**

தாயின் மடியில்: **23-04-1966** — ஆண்டவன் அடியில்: **06-06-1987**

அண்ணன் 'அல்பேட்' காட்டிய வழியை
அவனின் பின்னால் நீயும் தொடர்ந்தனை
தன்னிகரின்றி தரணிக் குணர்த்திய
தாரக மந்திரமாக வெங்காதில்
இன்னு மின்னும் ஒலித்துக் கொண்டிருக்கும்
ஏகாந்தக் குரல் 'தியாகம்' என்பதே.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணிமார்
உறவினர்கள், நண்பர்கள்


R-336

---

4ஆவது ஆண்டு

## நினைவஞ்சலி

வீரஜனனம் 8 - 9 - 1961



வீரமரணம் 6 - 6 - 1986

**குலசேகரம் கெங்காதரன்**
**(கிறோராஜ்)**

நீ கடந்த பாதை இன்னும்
மௌனித்தே கிடக்கிறது...
அமைதியின் ஆளுகையில்...
இருப்பினும் -- உனது தடங்களில்
ஆயிரம் பதிவுகள்...தொடரும்...

மல்லாகம் வாழ் மக்கள்

(B 338)

---

கடந்த 2ஆம் திகதியில் இருந்து இப்புதியவிலை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும் இந் நிறுவனத்தினரால் தயாரிக்கப்படும் போத்தல் பால், தயிர், ஐஸ்கிறீம், ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் காலை உணவாக பெரும்பாலும் பாண் வாங்குவார்கள். ஆனால் பாடசாலையில் இலவச உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் பாண் வாங்குபவர்களின் எண்ணிக்கையும்குறைந்துவிட்டது. அதேவேளைபாடசாலைகளில் கோதுமை மாவில் செய்யும் உணவிலும் பார்க்க உள்ளூர்த் தானியங்களில் செய்யும் உணவிற்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. இதன் காரணமாக கோதுமை மாவின் விற்பனை குறைந்துள்ளது.

மேலும் அரிசி ஒரு கிலோவிற்கு ஒருரூபாய் ஐம்பதுசதம் குறைந்துள்ளது. பாண், மா என்பன விலை அதிகரிப்பதும் கூட இதற்கு ஒரு காரணம் ஆகும். (ம)

## கடல்படகு இயந்திரம் திருத்தும் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் கடல் படகு இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறியை 2-6-90 அன்று வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்

இதன் போது திரு சுந்தரலிங்கம் அவர்கள் பேசுகையில் பின்தங்கிய கிராமங்கள் தொடர்ந்தும் பின்தங்கிய கிராமமாகவே இராது வளர்ச்சியுற வேண்டும். பின்தங்கிய கிராமத்தில் உள்ளவர்களுக்கும் கல்வி வசதி அளிக்க வேண்டியதே எமது முயற்சியாகும என்றார்

மேலும் திரு ச. சுப்பிரமணியம் உரையாற்றும் போது, இப்பயிற்சி நெறிகளில் கற்ற அறுபது வீத மாணவர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றிருப்பது இத்திட்டத்தின் வெற்றிக்கு அறிகுறியாகும். எனவே பயிற்சி பெறும் மாணவர்கள் பயிற்சித் திட்டத்தில் இருந்து இடைவிலகாமல் முழுமையாக்கிக் கொள்ள வேண்டும் என்றார். (ம)

# திருகோணமலை மாவட்டத்தில் நெருப்புக்காய்ச்சல் நோய்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடந்த ஆண்டில் ஐநூற்றி அறுபத்தொம்பது பேர் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

இதற்கு முந்திய ஆண்டுகளைவிட சென்ற ஆண்டிலே தான் கூடுதலான மக்கள் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர் என்பது அண்மையில் திருக்கோணமலையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

1985இல் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணக்கை 96, அதே போன்று 1986 இல் 140, 1987இல் 707, 1988இல் 464 எனவும் தெரிவிக்கபபட்டது.

இக் கருத்தரங்கை திருக்கோணமலை சுகாதார வைத்திய அதிகாரி, டாக்டர் ஈ.ஜி. ஞானகுணாளன் ஒழுங்கு செய்திருந்தார்.

அரசாங்க அதிபர் திரு·கே. பி விஜயக்கோன் தலைமையில் இக்கருத்தரங்கு இடம் பெற்றது.

கீழ் காணைப்படும் காரணங்களாலேயே நெருப்புக்காய்ச்சல் அதிகரித்துள்ளதாக அங்கு கருத்து தெரிவிக்கப்பட்டது.

1) பிரித்தானியஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட வடிகால்கள் திருத்தப்படாமலும் பராமரிக்கப்படாமலும் இருக்கின்றன இதனால் கொசுக்கள், நுளம்புகள் பெருமளவு குடிகொள்ளும் இடங்களாகும்.

2)வாளி மலசல கூடம்பயன் படுத்தப்படுவது.

3)பெரும்பாலான நகரமக்கள்கொதித்து ஆறியநீரைக் குடிப்பதில்லை.

4)ஹொட்டேல்களும், சாப்பாட்டுக் கடைகளும் துப்பரவாக இல்லை.

கிராமப் புறங்களை விட நகரத்திலேயே அதிகமானோர் நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர். 1989இல் நகரப்பகுதியில் மாத்திரம்326 பேர் பீடிக்கப்பட்டிருந்தனர் 1988இல் இது274ஆகும்.

இதேபேல ஏனைய இடங்களில் உள்ள விபரங்களின்படி நிலா வெளியில் 141, தம்பலகாமம் கிண்ணியா 10,புல்மோட்டை 5, கந்தளாய் 22, மூதூர் 13, கிளிவெட்டி 8, ஆகிய தொகையினரே நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தனர்(67)


## தேவை

**காந்தி சேவா சங்கம்,**
உருத்திரபுரம்.

வட-கிழக்கு அபிவிருத்தி புனர் வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்படும் ஆதரவற்ற சிறுவர் பராமரிப்புநிலையத்திற்குச் சேவைமனப்பான்மையுடனும், தொண்டு மனப்பான்மையுடனும் வேலை செய்யப் பெண்கள் தேவை. கவர்ச்சியான சம்பளம், இருப்பிட வசதி, உணவு ஆகியன வழங்கப்படும். சிறுவர் பராமரிப்பிற்கு 5 பெண்களும், உடைகள் தைக்க 3 பெண்களும் அலுவலகத்தில் வேலை செய்ய 18 வயதிற்குக் குறைந்த ளைஞனும் தேவை.

15-06-90 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

(B 1101)

பதக்கம் பரிசு பெற்ற
விசுவின்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
**அபூர்வ சகோதரர்கள்**

## தேவை

உடைந்த வெள்ளைப் போத்தல் ஓடுகள் தேவை. எமது தொழிற்சாலைக்கு நேரில் கொண்டு வந்து தருபவர்களுக்கு ஒரு கிலோவுக்கு 1 ரூபா 10 சதம் வீதம் வழங்கப்படும்.

எமது தொழிற்சாலைக்காக எவராவது தமது இடங்களில் போத்தல் ஓடுகளைச் சேகரிக்கலாம். தகுதியானவர்களுக்கு முற்பணம் வழங்கப்படும். போத்தல் ஓடுகள் சேர்ந்தவுடன் எமக்கு அறிவித்தால் உடனடியாக வந்து ஒரு கிலோவுக்கு ஒரு ரூபா வீதம் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வோம். யாழ்ப்பாணத்திற்கு வெளி மாவட்டங்களில் உள்ளவர்களும் ஓடுகளைச் சேகரித்து எமக்கு அறிவித்தால் நாம் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்வோம்.

**த பெனின்சுலா குறூப்,**
**மகேந்திரா**
**கண்ணாடித் தொழிற்சாலை,**
அரஸ்கோ கட்டடம்,
163, கண்டி வீதி.
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(B 1103)


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## மகாபொல கொடுப்பனவு

**1988/1989 9ம், 10ம்**
**தவணைப் பணங்கள்**
**மருத்துவபீட மாணவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| I. | 2ம், 3ம் வருடங்கள் | 05.06.90 | 9.00 - 12.00 |
| | | 08.06.90 | 9.00 - 12.00 |
| | | 11.06.90 | 1,30 - 3.00 |
| II. | 4ம், 5ம் வருடங்கள் | 05.06.90 | 1.30 - 3.00 |
| | | 06.06.90 | 9.00 - 12.00 |
| | | 11.06.90 | 9.00 - 12.00 |

மேற்படி, கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவின்போது:-

1. தேசிய, பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூ.2/- பெறுமதியான முத்திரை
3. மாணவர் பதிவுப் புத்தகம்
என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

★ தேசிய அடையாள அட்டைகளின்றி கொடுப்பனவுகள் செய்யப்பட மாட்டாது.


(B/1100) பதிவாளர்.

# வைத்தியசாலை குறைபாடு பற்றி நிர்வாகத்திற்கு அக்கறை இல்லை

கேள்வி: தங்கள் அமைப்பு தொடர்பாக சில தகவல்களைத் தரமுடியுமா...?

பதில்: எமது அமைப்பின் பெயர் தடையற்ற வைத்திய சேவை (Medecins Sans Frontieres)ஆகும். 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று 30 நாடுகளில் சுமார் 800 டாக்டர்கள், தாதிகள் பணிபுரிகின்றார்கள்.

யுத்தம்: பட்டினி, தொற்று நோய், இயற்கையின் சீற்றம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றுவதே எமது குறிக்கோளாகும். எமது சேவையில் எவ்வித பாகுபாடும் இல்லை. சேவையில் இணைந்து கொள்ள முன்பு பின்வருமாறு சத்தியப்பிரமாணம் செய்கின்றோம்.



'தடையில்லா வைத்திய சேவை, தன் சேவை வழங்குதல், இயற்கை அழிவுகள், விபத்துக்கள், வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன, மத, சமூக, அரசியல் வேறுபாடின்றி சேவையாற்றுவோம்.'

கேள்வி: தங்கள் அமைப்பு எத்தகைய சூழ்நிலையில் உருவானது?

பதில்: 1969 ஆம் ஆண்டு பைப்றா (Biafra) உள்ளூர் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஓரிரு பிரெஞ்சு டாக்டர்கள் சென்றனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்கீழ் செயல்படுவதால் எமக்குச் சுதந்திரம் இல்லை என்பதை பிரெஞ்சு டாக்டர்கள் உணர்ந்தனர். காரணம் ஒரு நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அரசு அனுமதி பெறவேண்டும் என்ற நல்லுறவுடனும் சந்தோசத்துடனும் ஒத்துழைப்பு வழங்கியதால்தான் சிறந்த சேவையாற்ற முடிந்தது ஏனையோர்களால்பிரச்சினைகள்இல்லை.

மட்டக்களப்பு பொதுவைத்திய சாலையில் மருந்துவகைகள், மருத்துவ பொருட்களுக்கு தட்டுப்பாடுகள்நிலவுகின்றன. இது பற்றிநிர்வாக மட்டத்தில் அக்கறை எடுக்கப்படுவதாக இல்லை. நாங்கள் எமது சுய முயற்சி மூலம் ஏதாவது உதவிகள் பெற்றுக் கொடுத்தால் சந்தோஷம் அடைகிறார்கள்.

ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றும் பிரெஞ்சு டாக்டர்கள் குழுவிற்கு கிடைத்துள்ள நிர்வாக ரீதியிலான ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கவில்லையென்று தான் சொல்ல வேண்டும்.

கேள்வி: தாங்கள் 9 மாத சேவை முடித்துக் கொண்டு தாயகம் திரும்புகின்றீர்கள். தங்கள் பணி தொடர யாராவது வருகை தந்துள்ளார்களா?

வந்து தமிழர்களுக்கு உதவி புரிய வேண்டும் என விரும்புகின்றார்கள். தமது விடுதலையை பயன் படுத்தி இங்கு வருகை தந்து இலவச சேவையாற்றுவதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். இதற்கு ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 7000 தான் எமது நிறுவனம் சாப்பாடு இருப்பிட வசதிற்காக வழங்குகின்றது.

கேள்வி: மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையிலும் கடமையாற்றினீர்களா?

பதில்: மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலை நோயாளர்கள் நிலை பரிதாபகரமானது. குடி நீர் வசதிகள் இல்லை. திருத்தப்படாத மலசல கூடம் சுத்தமான சமையால் இல்லை. நோயாளர்கள் கவனிக்கப்படாத நிலைதான் அங்கு காணப்பட்டது.

அவ் வைத்திய சாலையில் சேவை செய்யும் வண சகோதரியொருவரின் நட்பு மூலம் தனிப்பட்ட ரீதியில் சென்று பார்வையிட்டேன்.

எமது அமைப்புமூலம் சுமார் 50,000 ரூபா செலவில் நீர்த் தொட்டி வசதியுடன், மலசல கூடம் திருத்தி கொடுக்கப்பட்டது. இது பற்றி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போது "தமது பொறுப்புகீழ்அல்ல கொழும்பு தலைமையகம் தான் பொறுப்பு" என்றார். கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டுஅனுமதி பெற்றுஎமது உதவிகளை செய்தோம்.

கேள்வி; மட்டக்களப்பு மக்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம்...?

பதில்: மட்டக்களப்பு தமிழருடன் நெருங்கிப் பழகுவது இலகுவானதல்ல. காரணப் மொழி, கலாசாரம் அதற்கு தடையாக இருக்லாம் பிறநாட்டவருடன் இணைவது விரும்பவில்லை போல் தெரிகிறது. ஆனால்பழகத்தொடங்கினால் நன்றாகவும் இனிமையாகவும் பழகுவார்கள்.

கேள்வி: தங்கள் சேவைக்கு

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் கடந்த 9 மாதத்துக்கும் மேலாக குழந்தை வைத்திய நிபுணராக பணிபுரிந்து தாயகம் திரும்பும் பிரஞ்சு MEDECINS SANS FRONTIERES அமைப்பைச் சேர்ந்த டாக்டர் செல்வி ஆன் வின்சன்ற் பத்திரிகையாளர்களுடன் நடாத்திய கலந்துரையாடலில் தெரிவித்த தகவல்கள் இங்கு தரப்படுகின்றது.

பதில்: இதோ (சுட்டிக் காட்டி) செல்வி லூக்கோரியல் வருகை தந்துள்ளார்.

கேள்வி: தாயகம் திரும்பிய பின்பு மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு உதவி செய்யும் நோக்கம் உண்டா?

பதில்: சத்திர சிகிச்சைக்கான உதவிகள் பெற்றுக்

காஷ்மீர் எல்லையில் பதற்றத்தைத் தணிக்க

# இந்தியாவின் யோசனைகளை பாகிஸ்தான் ஆராய்கிறது

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினை காரணமாக இந்திய பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ளபதற்றத்தை தணிப்பதற்குஇந்தியா தெரிவித்த யோசனைகளை பாகிஸ்தான் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த யோசனைகள் பாகிஸ்தானுக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்த அந்த அதிகாரி பாகிஸ்தான் இந்தியாவுடன் இதன்படி பேச்சு நடாத்த இவை போதுமா என்பதை தாம் ஆராய்ந்து வருவதாகவும் சொன்னார்.

பாகிஸ்தான்-இந்தியா எல்லைப்பகுதியில் இருந்து இந்தியா தனது இராணுவகவசவாகனப் பிரிவு விலக்கப்பட்டதை பாகிஸ்தான் அவதானித்து அதன்படி செயல்படும் எனவும் அவர் கூறினார்.

எல்லைப்புறத்தில் உள்ள பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளும் இந்திய இராணுவ அதிகாரிகளும் அடிக்கடி தம்மிடையே தொடர்பு கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இராணுவகவசவாகனப் ரிவு விலக்கப்பட்டது தொடர்பாக பாகிஸ்தான்பிரதமர் பெனாசிர் பூட்டோ பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஸாக்கானுடன் பேச்சுநடாத்தியுள்ளார்.

## உதவி வழங்கும் நிலையங்களில் கெரில்லாக்கள் தாக்குதல்

(காபுல்)

பாகிஸ்தான் - ஆப்கான் ந் எல்லை பிராந்தியத்தில் அமைதுள்ள மேற்குலக நாடுகளின் உதவி வழங்கும் நிலையங்கள மீது கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அமெரிக்க சோவியத் பேச்சு வார்த்தைகளுக்கு குந்தகம் விளைவிக்க எடுக்கப்பட்ட முயற்சியாகும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

உறிக்மதியார் கட்சியைச் சேர்ந்த சுமார் நூறு தீவிரவாதிகள் இததாக்குதலில் மேற்கொண்டார்களாம்.

ஆஸ்திரிய மனிதநேய தர்ம நிலையங்கள் முக்கியமாக தாக்குதலுக்குள்ளான கட்டடங்களாகும். கெரிலாக்களின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் இந்த அளம்புகள் அமைந்துள்ளன.

இதே வேளை பாகிஸ்தானில் உள்ள ஆப்கான்அகதிகள் சர்வதேச அமைப்புக்களிடம் பாதுகாப்புக் கோரியுள்ளனர்.

## இந்திய திரைப்பட இதழ் ரஷ்ய மொழியில் வெளிவரும்

(மாஸ்கோ)

இந்தியத் திரைப்படங்கள் பற்றிய திரைப்பட இதழ் ஒன்று ரஷ்ய மொழியில் வெளியிடப்படவுள்ளது. சோவியத், இந்திய திரைப்பட விமர்சகர்கள் கூட்டாகத் தயாரிக்கும் இவ்விதழ் பம்பாயில் அச்சிடப்பட்டு, சோவியத் நாட்டில் விநியோகிக்கப்படவுள்ளது.

மாஸ்கோவிலுள்ள இந்தியத் திரைப்பட ரசிகர்களின் அமைப்பான சினிமா கிளப் சமீபகாலத்தில் இந்தியாவுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பி வைத்தது.

இத் தூதுக் குழுவினர் புதிய திரைப்படம் வெளியிடுவதற்கான பேச்சுவார்த்தைகளை அங்கு மேற்கொண்டிருந்தனர்.

இத தூதுக்குழு தமது இந்திய விஜயத்தின் போது இந்தியாவின் பிரபல திரைப்பட இயக்குநர்களான சத்தியஜித்ரே, மிர்னால் சென், பெனகல், அடூர் கோபாலக்கிருஷ்ணன் ஆகியோரையும் சந்தித்துப் பேசினர்.

## சீனாவில் விசேட நெல்லினம்

(சீனா)

மற்ற நெல் இனங்களையும் விட 25 சதவீதம் அதிக விளைச்சலைத் தரக்கூடிய நெல்லினம் ஒன்றை சில ஆண்டுகளுக்கு முன்பு சீனா உருவாக்கியது. சீனாவில் மூன்றுகோடி முப்பதுஇலட்சம் ஹெக்டர் நெல்வயல்களில் மூன்றிலொரு பங்கில் அந்த விசேட நெல்லினம்தான் பயிரிடப்படுகிறது. ஆனால் அந்த நெல்லினம் மற்ற நாடுகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

# 1990 உலகக் கோப்பை யாருக்கு?

உலக மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 14வது உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் நாளை மறுநாள் இத்தாலியில் ஆரம்பமாகிவிடும். தொடர்ந்து சரியாக ஒரு மாதம் நடைபெறும் இப்போட்டிகள் மொத்தம் 52 ஆட்டங்களைக் கொண்டிருக்கும். 528 உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் தம்மை நிரூபிப்பதுடன் தம் நாட்டுக்கு, மிகமதிப்பு வாய்ந்த ஜூல்ஸ் றி மட் கிண்ணத்தையும் கொண்டு செல்ல முயற்சிக்கப் போகிறார்கள்.

போட்டி யாருக்கிடையில்

டியேகோ மரடோனா சுப்பர்ஸ்டாரராக மிளிரே அவருக்குத் துணை நின்ற பலர் இன்று 4 வயதால் கூடியவர்கள். லூயிஸ் பிரவுண், வலடானோ ஜோஸ், றிக்காடோ குஸ்டி போன்றோரை இங்கு குறிப்பிடலாம். அதே வீச்சு 90இல் இந்த வீரர்களிடம் இருக்குமா? எனவே மரடோனாவின் பொறுப்பு அதிகிடையிலான போட்டிகளில் மூன்று கிண்ணங்களையும் இத்தாலி இம்முறை வென்றிருப்பது இன்னொரு காரணம். மூன்றாவது காரணம் மிகவும் இளமையான ஆனால் மின்னல் வீச்சுக் கொண்ட அணியாக இத்தாலி காணப்படுகின்றமை. ஆனால் இவர்களும் தங்கள் வெற்றியின் போது ஏன் நிறைய கோல்கள்

1958இல் சுவீடனில், சுவீடனை பிரேஸில் மண் கவ்வச் செய்தது. ஆனால் 1982, 1986இல் நடைபெற்ற போட்டிகளில் பிரேஸில் இறுதிப் போட்டிக்கு வர ஏன் இயலவில்லை என்பதற்கு இன்று வரை பதில் இல்லை. இம்முறை இவர்கள என்ன செய்யப் போகின்றார்கள்? நிச்சயமாக இலகுவில் பிரேஸில் எதையும விட்டுக் கொடுக்கப் போவதில்லை. ஆனால், உள்ளூர் போட்டிகளில் பிரேஸில் கழகங்களின் தரம் சிறிது குறைவுபட்டே காணப்பட்டாலும் சர்வதேச ரீதியில் முதல்தர அணியொன்றை ஆக்கி வைத்திருக்கும்பெருமை பயிற்றுனர் லசரோனி அவர்

## யார் அந்த சுப்பர் ஸ்ரார்?

| | | | |
|---|---|---|---|
| 1. | டியாகோ மரடோனா | - | ஆர்ஜென்ரீனா |
| 2. | கியான்லூகா வியாலி | - | இத்தாலி |
| 3. | றொபோட்டோ பாகியோ | – | இத்தாலி |
| 4. | தோமஸ் ஹஸ்லர் | - | மேற்கு ஜேர்மனி |
| 5. | டிகொன் ஸ்டாஜ்விக் | - | யூகோஸ்லாவியா |

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் கடந்த 9 மாதத்துக்கும் மேலாக குழந்தை வைத்திய நிபுணராக பணிபுரிந்து தாயகம் திரும்பும் பிரஞ்சு **MEDECINS SANS FRONTIERES** அமைப்பைச் சேர்ந்த டாக்டர் செல்வி ஆன் வின்சன்ற் பத்திரிகையாளர்களுடன் நடாத்திய கலந்துரையாடலில் தெரிவித்த தகவல்கள் இங்கு தரப்படுகின்றது.

களுக்கு இன, மத, சமூக, அரசியல் வேறுபாடின்றி சேவையாற்றுவோம்.'

கேள்வி: தங்கள் அமைப்பு எத்தகைய சூழ்நிலையில் உருவானது?

பதில்: 1969 ஆம் ஆண்டு பைப்றா (Biafra) உள்ளூர் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஒரிரு பிரெஞ்சு டாக்டர்கள் சென்றனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்கீழ் செயல்படுவதால் எமக்குச் சுதந்திரம் இல்லை என்பதை பிரெஞ்சு டாக்டர்கள் உணர்ந்தனர். காரணம் ஒரு நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அரசு அனுமதி பெறவேண்டும் என்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கை எமக்கு விருப்பமில்லை. அப்படியானால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வது முடியாத நிலை. எந்த இடத்திலும் எந்நேரத்திலும் செயல்பட வேண்டுமென்பதற்காகவே 1971ஆம் ஆண்டு புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

கேள்வி: தங்கள் அமைப்பு எதிர்நோக்கும் நிதி நெருக்கடிக்கு தீர்வு யாது?

பதில்: எந்த அரசும் எமக்கு நிதியுதவி தருவதில்லை.

எமது சுயமுயற்சி பிரெஞ்சு மக்கள் நன்கொடை தந்து உதவி செய்கிறார்கள்.

அகதிகள் உள்ள நாடுகளில் எமது பணிக்கு யூ.என்.எச்.சி.ஆர் உதவி செய்கிறது.

ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பு இயற்கை அழிவுகளுக்கு சேவை செய்ய உதவி புரிகின்றது.

கேள்வி: இலங்கையில் தங்கள் சேவை தொடர்பான தகவல்கள் தரமுடியுமா...?

பதில்: 1986 ஆம் ஆண்டு இறுதியில் பிரெஞ்சு டாக்டர்கள் வருகை தந்தனர் 1987ஆம் ஆண்டு செப்டம்பரில் மட்டக்களப்புக்கு வருகை தந்தனர். கொழும்பில் மருத்துவ இணைப்பாளர் உட்பட 4பேர் நிரந்தரமாகவுள்ளனர் மட்டக்களப்பு, திருமலை, பருத்தித்துறை, மன்னார் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் தாதிகள் உட்பட 18 பேர் பணிபுரிகின்றார்கள்.

கேள்வி: மட்டக்களப்பு பொது வைத்திய சாலையில் தங்கள் சேவை பற்றி...?

பதில்: இவ்வைத்தியசாலையில் குழந்தை வைத்திய நிபுணர் இல்லாத பெரும் குறைபாடு எனது சேவை மூலம் தீர்ந்துள்ளது என்றுதான்கூற வேண்டும்.

சுமார் 3500 பேருக்கு சிகிச்சையளித்துள்ளேன். ஏப்ரல் மாதம் மட்டும் 413 பேர்உள் நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தாதிமார், அட்டென்மார் வது வருகை தந்துள்ளார்களா?

பதில்: இதோ (சுட்டிக் காட்டி) செல்வி லூக்கோரியல் வருகை தந்துள்ளார்.

கேள்வி: தாயகம் திரும்பிய பின்பு மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு உதவி செய்யும் நோக்கம் உண்டா?

பதில்: சத்திர சிகிச்சைக்கான உதவிகள் பெற்றுக் கொடுக்க முயற்சி எடுக்கப்படும். விஷேட ஆபேரஷன் நிபுணர், மயக்கமருந்து

## இரா. உதயகுமார்

கொடுக்கும் நிபுணர்கள் உதவிகள் வழங்குதல் ஆபேரஷன் தியேட்டர்க்குத் தேவையான உதவிகள் வழங்குதலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்

கேள்வி: தங்கள் நாட்டில் இலங்கைத் தமிழர் நிலை எப்படி அமைகிறது?

பதில்: இலங்கை டிப்ளோமா சான்றிதழுக்கு அங்கு வேலைவாய்ப்பு இல்லை இங்கு டாக்டர் பட்டம் பெற்றவர்கூட அங்கு டாக்டராக பணிபுரிய முடியாது.

கேள்வி; மட்டக்களப்பில் சேவையாற்றிய 9 மாதகாலத்தில் இந்தியப்படை, தமிழ் தேசிய இராணுவம், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தங்களுக்கு ஏதாவது அனுபவம் உண்டா?

பதில்; இந்தியப்படை காலத்தில் சோதனை நேரத்தில் எமக்கு 'பாஸ்' தேவைப்பட்டது.

தமிழ் தேசிய இராணுவம் வைத்திய சாலைக்குள் நடமாடியதால் அசௌகரியங்கள் ஏற்பட்டன. எமது வாகனத்தைகூட எடுத்துச் செல்ல முயன்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நல்லுறவு காணப் படுகிறது. எமது கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கிறார்கள். ஆயுதங்களுடன் வைத்தியசாலைக்குள் வருவதை கூட நிறுத்தி விட்டனர்.

இந் நிலையில் எனது சேவைக்காலம் புதுமையானதாக இருந்தது.

கேள்வி: ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்ய பிரெஞ்சு டாக்டர்கள் விரும்புவதாக அறிகின்றேன் உண்மையா?

பதில்: பிரெஞ்சு நாட்டு வைத்தியநிபுணர்கள்இலங்கை

பதில்: மட்டக்களப்பு தமிழருடன் நெருங்கிப் பழகுவது இலகுவானதல்ல. காரணப் மொழி, கலாசாரம் அதற்கு தடையாக இருக்லாம் பிறநாட்டவருடன் இணைவது விரும்பவில்லை போல் தெரிகிறது. ஆனால்பழகத்தொடங்கினால் நன்றாகவும் இனிமையாகவும் பழகுவார்கள்.

கேள்வி: தங்கள் சேவைச்கு மொழி தடையாக இல்லையா?

பதில் பெரிய தடையாக தெரியவில்லை, தாதிகள் மூலம் மொழி தொடர்பான பிரசினைகளுக்கு தீர்வுகாணப்படும்.

கேள்வி: மட்டக்களப்பு தமிழர்கலாசாரத்தை விரும்புகின்றீர்களா?

பதில்: '' ஆம் '' எனக்கு பிடித்தமானது. இந்து ஆலயங்கள் சென்றுள்ளேன். திருமண வைபவங்களில் நான் கூட சேலை அணிந்து கலந்து கொண்டுள்ளேன்.

கேள்வி: தாங்கள் தாயகம் திரும்பும் தங்கள் மனநிலை எப்படி இருக்கிறது?

பதில்: தாயகம் திரும்புவது மகிழ்ச்சியாக இருக்கலாம்· ஆனால் ஒன்பது மாத காலம் என்னுடன் அன்புடனும், பண்புடனும், விருந்தோம்பலுடனும் பழகியவர்களை விட்டுப் பிரிந்துசெல்வது கவலையளிப்பதாகவுள்ளது.

தாதிகள் எனக்கு வழங்கிய பிரியாவிடை மூலம் என்மீது காட்டிய அன்பின் பெறுமதியை புரிய முடிந்தது. இதனால் நான் விடைபெறும் போது உணர்ச்சி வசப்பட்டேன்.

கேள்வி: தாயகம் திரும்பும் தங்களின் இன்றைய அபிலாஷை என்ன?

பதில்; இந் நாட்டின் இன்றைய நிலை ஸ்திரமானதாக அல்ல. என்ன நடக்குமோ என்று கவலைப்படுகின்றேன். எந்தப்பக்கம் வெற்றி கிடைக்கும்? யாருக்கு திசை திரும்பும்? என சொல்ல முடியாது.

சமாதானம் மலர வேண்டும். அமைதி நிலவவேண்டும். பிற நாட்டில் பணி புரியும் தமிழ் டாக்டர்கள் தாயகம் திரும்பவேண்டும் என இறைவனை பிரார்த்தனை செய்கின்றேன். (37)

---

உலக மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 14வது உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் நாளை மறுநாள் இத்தாலியில் ஆரம்பமாகி விடும். தொடர்ந்து சரியாக ஒரு மாதம் நடைபெறும் இப் போட்டிகள் மொத்தம் 52 ஆட்டங்களைக் கொண்டிருக்கும். 528 உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் தம்மை நிரூபிப்பதுடன் தம் நாட்டுக்கு, மிகமதிப்புவாய்ந்த ஜூல்ஸ் றிமட் கிண்ணத்தையும் கொண்டு செல்ல முயற்சிக்கப் போகிறார்கள்.

### போட்டி யாருக்கிடையில்

இதுவரை உலகக் கிண்ணத்தைத் தட்டிச் சென்ற நாடுகள் ஐரோப்பா லத்தீன அமெரிக்காக் கண்டங்களைச் சேர்ந்தவையே இன்று உலகின் எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த நாடுகள் இப் போட்டிகளில் கலந்துகொண்டாலும் உண்மையான போட்டிகள் இவ்விரு கண்டங்களைச் சேர்ந்த நாடுகளுக்கிடையே தான் காணப்படும். சுருக்கமாகக் கூறுவதாயின் ஐரோப்பிய, லத்தீன் அமெரிக்க நாடுகள் கிண்ணத்துக்காகப் போட்டியிட, ஏனைய நாடுகள் பங்குபற்றும் பெருமைக்காகப் போட்டியிடுகின்றன எனலாம்.

மேற்படி இரண்டு கண்ட நாடுகளை எடுத்துக் கொண்டாலும் கூட இம்முறை முதல் தர வரிசைக்குட்பட்டிருக்கும் நாடுகள் ஆர்ஜன்டீனா, பிரேசில், இங்கிலாந்து, இத்தாலி நெதர்லாந்து, சோவியத் ரஸ்யா உருகுவே, மே. ஜேர்மனி என்பனவாகும், இந்த வேளை பங்குபற்றலே பெருமை எனத் திருப்தியுறும் நாடுகளாக கமரூன், கொலம்பியா. கோஸ்டாரிக்கா, எகிப்து, தன்கொரியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஐக்கிய அமெரிக்கா ஆகியன கருத்திற் கொள்ளப்படுகின்றன. இவற்றை விட்டால் மிகுதி நாடுகளில் றோமானியா, சுவீடன், பெல்ஜியம் ஸ்பானியா. முதலியன ஒதுக்கப்பட முடியாத நாடுகளாகக் கணிக்கப்படுகின்றன முதல் வரிசை நாடுகளையும் சில வேளைகளில் இவை நிலைகுலைய வைக்கும் என்று வல்லுநர்கள் கருதுகிறார்கள். எனினும் அனேக வல்லுநர்களின் கருத்துப்படி கால் இறுதிப் போட்டிக்கு முதல் தர வரிசைக்குட்படுத்தப்பட்ட நாடுகளே தெரிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆர்ஜன்டீனா

ஆர்ஜென்டீனா இன்றைய உலகச் சாம்பியன். 1986இல் டியேகோ மரடோனா சுப்பர்ஸ்டாராக மிளிரே அவருக்குத் துணை நின்ற பலர் இன்று 4 வயதால் கூடியவர்கள். லூயிஸ் பிரவுண், வலடானோ ஜோஸ், றிக்காடோ குஸ்டி போன்றோரை இங்கு குறிப்பிடலாம். அதே வீச்சு 90இல் இந்த வீரர்களிடம் இருக்குமா? எனவே மரடோனாவின் பொறுப்பு அதிகரிக்கின்றது 1982இல் மைதானத்தில் மரடோனாவை எதிர்தரப்பு வீரர்கள் ஆடவே விடாமல் வியூகம் அமைத்து மடக்கினார்கள், 1986இல் அவற்றை முறியடித்து தனித்தே கோல்போடும் திறமையை வளர்த்துக் கொண்டவர் மரடோனா. எனவே இம் முறையும் மைதானத்தில் அவர் பல வித்தைகளைக் காட்டுவதை, எதிரணியினர் தடுக்க முடியாமலே இவருக்கும் கடந்த வருட ஆட்டங்களில் ஆர்ஜென்டீனா 6 கோல்கள் மட்டுமே போட முடிந்ததென்பதும் இது சாதகமான நிலையில்லை என்பதும் ஒரு கருத்து. ஆனால் பல வீரர்களும் ஐரோப்பிய குழுக்களில் ஆடுபவர்கள் என்பது அவர்களை ஒருங்கிணைத்து கடந்த ஒருமாதமாக ஐரோப்பாவிலேயே அணி தங்கியிருப்பதும், ஆர்ஜென்டீனா முழுமை பெற்ற அணியாக முதல் ஆட்டத்திலேயே களம்காணும் எனலாம். மேலும் இத்தாலியோடு மோதாத எந்தவொரு போட்டியிலும் இத்தாலிய ரசிகர்களின ஆதரவு ஆர்ஜென்டீனாவுக்கே இருக்கும்.

### இத்தாலி

உலகக் கிண்ணத்தை மூன்று முறை வென்றவர்கள் பிரேஸிலும் இத்தாலியும் மட்டுமே. இந்தச் சாதனையை முறியடித்து இம்முறைநான்காவது முறையாக உலகக்கிண்ணத்தை இத்தாலி வெல்லுமா? வெல்லும்என்கிறார்கள் அநேகர். போட்டிகள் நடாத்தப்படும்நாடுஅநேகமாக வெல்வது உலகக்கிண்ணப் போட்டிகளில் காணப்படும் அம்சம் என்பது ஒன்று. அடுத்தது ஐரோப்பிய கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் மூன்று கிண்ணங்களையும் இத்தாலி இம்முறை வென்றிருப்பது இன்னொரு காரணம். மூன்றாவது காரணம் மிகவும் இளமையான ஆனால் மின்னல் வீச்சுக் கொண்ட அணியாக இத்தாலி காணப்படுகின்றமை. ஆனால் இவர்களும் தங்கள் வெற்றியின் போது ஏன் நிறைய கோல்கள் போடுவதில்லை என்பதை இத்தாலிய பயிற்றுனர் தீவிரமானதொரு பிரச்சினையாக சிந்தித்துக் கொண்டிருக்கின்றார். எது எவ்வாறாயினும் வோல்டர் செங்கா, பாசலோ மாட்டினி, றொபோட்டா டொனாடொனி, வியாலி, பாகியோர் போன்றோர் எதனையும் இலகுவில் விட்டுக்கொடார்.

### பிரேஸில்

இன்னொரு குறிப்பிடத்தக்க அணி பிரேஸில். இவர்கள் 1958, 62, 70ஆம் ஆண்டு



களில் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்ற[illegible]ர்கள்; முதன் முறையாக[illegible] முறை வென்று பழை[illegible]ல்லை றிமெட் கிண்ணத்[illegible] தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டவர்கள். மேலும் தென் அமெரிக்காவுக்கு வெளியே ஐரோப்பாவில், ஐரோப்பிய நாடொன்றைத் தோற்கடித்து உலகக் கோப்பையை வென்ற ஒரேயொரு தென் அமெரிக்க நாடும் பிரேஸில் தான். 1958இல் சுவீடனில், சுவீடனை பிரேஸில் மண் கவ்வச் செய்தது. ஆனால் 1982, 1986இல் நடைபெற்ற போட்டிகளில் பிரேஸில் இறுதிப் போட்டிக்கு வர ஏன் இயலவில்லை என்பதற்கு இன்று வரை பதில் இல்லை. இம்முறை இவர்கள என்ன செய்யப் போகின்றார்கள்? நிச்சயமாக இலகுவில் பிரேஸில் எதையும விட்டுக் கொடுக்கப் போவதில்லை. ஆனால், உள்ளூர் போட்டிகளில் பிரேஸில் கழகங்களின் தரம் சிறிது குறைவுபட்டே காணப்பட்டாலும் சர்வதேச ரீதியில் முதல்தர அணியொன்றை ஆக்கி வைத்திருக்கும்பெருமை பயிற்றுனர் லசரோனி அவர்களையே சாரும். அதோடு பிரேஸிலின் 12 வீரர்கள் தற்போது ஐரோப்பியக் கழகங்களுக்காக ஆடிக்கொண்டிருப்பவர்கள். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் றிக்காடோ, கரிக்கா, பபிடோ, கார்லொஸ் மோஸர், பிரான்கோ போன்றோர். பிரேஸிலின் இழப்பு றொமாரியோ விளையாட முடியாமல் இருப்பதே.

### மே. ஜேர்மனி

இன்னொரு முன்னணி நாடாகக் குறிப்பிடப்பட வேண்டியது மே. ஜேர்மனி இவர்களின் பயிற்றுனாரான பெக்கன்பேர் உதைபந்தாட்ட உலகின் முடி சூடாத மன்னராகத் திகழ்ந்தவர். விரல் விட்டு எண்ணக் கூடிய அதி சிறந்த வீரர்களுள் இவரும் ஒருவர். இவர் வளர்த்தெடுத்துள்ள அணி சிறப்பான அணியாகக் கருதப்படுகிறது. எதிர்கால சுப்பர்ஸ்டார் தோமஸ் அஸ்லர், லோதர், மத்யூஸ் கிளின்ஸ்மன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்க வீரர்கள். மே. ஜேர்மனி காலம் காலமாகவே உலகக் கிண்ணப் போட்டிகளில் உரம் பெற்ற எதிரணியாகவே எல்லா அணிகளுக்கும் முகம் கொடுத்துள்ளது. 1954 லும், 74 லும் இருமுறை உலகக்கிண்ணத்தை

(4ஆம் பக்கம் பார்க்க)

## யார் அந்த சுப்பர் ஸ்ரார்?

1. டியாகோ மரடோனா - ஆர்ஜென்ரீனா
2. கியான்லூகா வியாலி - இத்தாலி
3. றொபோட்டா பாகியோ - இத்தாலி
4. தோமஸ் ஹஸ்லர் - மேற்கு ஜேர்மனி
5. டீகொன் ஸ்டாஜ்விக் - யூகோஸ்லாவியா
6. ஜோர்ஜ் ஹாகி - றோமானியா
7. புறொட்டசோவ் - சோவியத் ரஷ்யா
8. மிலயிட்சென்கோ - சோவியத் ரஷ்யா
9. மார்கோவன்பஸ்டன் - நெதர்லாந்து

1990 உலகக் கிண்ணப் போட்டிகள் முடிவுறும்போது இவர்களில் ஒருவரே சுப்பர் ஸ்ராராக மிளிருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நெடுந்தீவுக் கடலில் வெளியார் மீன்பிடிப்பது பற்றி சமரச மாநாடு

(தீவுப்பகுதி)

நெடுந்தீவுக் கடலில் வெளியூர் மீனவர்களும், அப்பிரதேச மீனவர்களும் மீன்பிடிப்பது சம்பந்தமான பிரச்சினைகளை தீர்த்து வைக்கு முகமாக ஓர் சமரச மாநாடொன்று வேலணை விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீவுப்பகுதி மீனவர்களும். குருநகர் இழுவைப்படகு மீனவர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் இருபகுதி மீனவர்களும் சமரச ஒப்பந்தம் செய்துகொண்டு பின்வரும் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டனர்.

நெடுந்தீவு வடகடலில் குருநகர் றோலர் மீன்பிடியாளர்கள் திங்கள், புதன், சனி ஆகிய நாட்களிலும் நெடுந்தீவு மீனவர்கள் செவ்வாய், வியாழன், வெள்ளி ஞாயிறு, ஆகிய நாட்களிலும் பனங்காணி முனையிலிருந்து கிராவெட்டி முனைவரை தொழில் மேற்கொள்ள வேண்டுமென்றும், எழுவைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு உட்பட ஆற்றுபகுதி, கடல் பகுதிகளில் றோலர் தொழில் செய்வது 3-6-90 இல் இருந்து முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதென்றும் இச்செயற்பாட்டை மீறி தொழில் மேற்கொள்ளும் இழுவைப் படகுமீது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கடும் நடவடிக்கை எடுப்பதென்றும் திங்கள். புதன், சனி ஆகிய நாட்களில் குருநகர் மீனவர்கள் நெடுந்தீவு கிழக்குப் பக்கமாக இரண்டு மைலுக்கு அப்பால் குறிப்பிட்ட அளவுதூரம் வரை தொழில் மேற்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (15)

## இணக்கமன்று

திருக்கோவில் உதவிஆணையாளர் பிரிவுக்குட்பட்ட டயஸ் கிராமத்தில்இணக்கமன்றுஅங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

இம் மன்றின் அங்கத்தினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். திரு.க.கந்தையா, அ.நிர்மலன், வீ.கணேசமூர்த்தி, சி இராஜேந்திரன், திருமதி.சி. செல்லம்மா (ஆசிரியை)சி. கணேசமூர்த்தி' சிசிவனடியான், வே கணபதிப்பிள்ளை, சு. சாந்தலெட்சுமி, க.தருமரெட்ணம்.

குறிப்பிட்ட பத்துப் பேர் கொண்ட குழுவுக்கு செயலாளராக திரு. வே. கணபதிப்பிள்ளையும், உபசெயலாளராக திருமதி. சி. செல்லம்மாவும்(ஆசிரியை) பொருளாளராக திரு. அ. நிர்மலனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# தம்பிலுவில், திருக்கோவில் பிரதேச சபைக்கு வரியாக 2,38,034 ரூபா பாக்கி

(தம்பிலுவில்)

தம்பிலுவில், திருக்கோவில் பிரதேச சபைக்கு, வாடகை வரிக்கணக்குகளின் பேரில் அதனோடு சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து இரண்டு லட்சத்து முப்பத்தியெட்டாயிரத்து முப்பத்துநான்கு ரூபா ஐம்பத்தியொரு சதம் பாக்கியாக உள்ளது என அறிவிக்கப்படுகிறது.

கடந்த வருடங்களில், பிரதேச சபையோடு தொடர்பு கொண்டு, தம்பிலுவில் பொதுச் சந்தையை குத்தகைக்கு எடுத்த வகையில் அதனோடு சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து 31-3-90 முடிய ரூபா 93,030 ரூபாவும் பிரதேச சபைக்குச் சேரவேண்டிய கடை வாடகை நிலுவையாக 1,27, 960 ரூபாவும் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தோட்டங்கள் சம்பந்தமானவரி (ஏக்கர் வரி) 10,984 ரூபா 41 சதமும் தமாசா வரி 6060 ரூபா 10 சதமும் ஆக மொத்தம் 23,8, 034 ரூபா 51 சதம் வரவேண்டியுள்ளது,

சம்பந்தப்பட்டவர்களை இதை கட்டி முடிக்கும்படி பல தடவைகள் பல அறிவித்தல்கள் மூலம் கோரியும் அவர்கள் அதைக் கட்டுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை

இதனால் இப் பிரதேசத்தில் சிறிய வேலைத் திட்டங்களை செய்ய முடியவில்லை என சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் கவலை தெரிவித்தார்.

இவற்றை அறவீடு செய்வதற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உதவியை கோரியுள்ளார்.

## மக்கள் கடை தேவை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் இறுப்பிட்டிப் பகுதியில் ஓர் மக்கள் கடை நிறுவப்படவேண்டும் என இப்பகுதி மக்கள் கோருகின்றனர்.

இதைப்பற்றி சங்கத்தின் முன்னைய நிர்வாகத்திடமும் தற்போதைய நிர்வாகத்திடமும் பலமுறை நேரிலும் எழுத்து மூலமும் தெரிவிக்கப்பட்டதாக தெரிகிறது. (22)

# சி. க. கூட்டுறவு சங்க செயலர்களுக்கு வேலை முகாம்

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு மாகாணங்களின் சிக்கனகடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உதவிச் செயலாளர்களுக்கான வேலை முகாம் கிளிநொச்சி பிராந்திய நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதேசப்பணிப்பாளர் திரு எஸ். இராஜரட்டினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு முப்பத்தி மூன்று உதவிச்செயலாளர்கள் பங்குபற்றினார்கள்.

கிளிநொச்சி மேலதிகமாவட்ட அரசாங்க அதிபர் திரு ஏ. அமிர்தலிங்கம் திரு. அ. சி முருகேசு கூட்டுறவு பரிசோதகர் திரு எஸ் ஸ்ரீஸ்கந்தராசா, திட்டமிடல் உத்தியோகத்தர் திருமதி ரீ. ராமச்சந்திரன் பயிற்றுநர்களான திரு. எம். தவனேஸ்வரன் செல்வி மாதங்கி லோகநாதன் ஆகியோர் இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

# மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஈரோஸ் புதிய எம். பி. தேரிவு

(பட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஈழவர் ஜனநாயக முன்னணி கடசி முககியஸ்தரொருவரை நியமனம் செய்யவிருக்கிறது.

இம்ம வட்டத்தில் ஈழவர் ஜனநாயக முன்னணிக்கு ஒரு ஆசனம் கிடைத்கது

திரு. கு. சௌந்தரராஜன் பதவி விலகல் காரணமாக வேட்பாளர் பட்டியலில் விருப்பத் தெரிவு வாக்கு அடிப்படையில் திரு. க வரதராஜன் நியமனம் பெற்றார்.

இவர் பாராளுமன்றம் செல்லாமல் பதவியை இராஜினமா செய்துள்ளதால் திரு பொ சுகுமார் நியமனம் பெற்றுள்ளார். இவரை இராஜினாமா செய்யுமாறு ஈழவர் ஜனநாயக முன்னணி கேட்டுள்ளது.

மேலும் இவருக்குக் கீழ்ப்பட்டியலிலுள்ள ஏனைய மூவரிமும் இராஜினாமா செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய அரசியல் சூழ்நிலை கருதி இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஈழவர் ஜனநாயக முன்னணி பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (37)

# "நீரும் சுகாதாரமும்" வானொலித் தொடர் நிகழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்விச் சேவை யூனிசெப்தாபனத்தின் உதவியுடன் ''நீரும் சுகாதாரமும்'' என்ற தொடர் நிகழ்ச்சி ஒன்றை ஒலிபரப்புகின்றது

ஐ நா. சிறுவர் நிதியத்தின் சர்வதேச திட்டத்தின் ஒரு பகுதியாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சி பற்றிய கைந்நூல் ஏற்கனவே பாடசாலைகளுக்கு இலவசமாக அனுப்பப்பட்டுள்ளது.

கல்விச் சேவையில் திங்கட்கிழமைகளில் காலை 9 50 க்கு இந்நிகழ்ச்சிஒலிபரப்பப்படும். அன்றிரவு 8.00 மணிக்கு மீண்டும் இதே நிகழ்ச்சி மறு ஒலிபரப்புச் செய்யப்படும்.

## வேலணை நூலகத்துக்கு நிதி ஒதுக்கீடு

(வேலணை)

வேலணை பிரதேச சபையின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் பொது நூல் நிலையத்தைத் திருத்தி அமைத்து தளபாடங்களை வாங்கி வைத்து பராமரிப்பதற்கென பாராளுமன்ற அங்கத்தவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து இருபத்தி ஐயாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுளளது.

யாழ்ப்பாணம்

# கல்வித் திணைக்களத்திற்கு புதிய கட்டிடம் தேவை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கென ஒரு கட்டிடத்தை அமைப்பதற்கு ரூபா 80 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பத்து லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார்கள் மிகுதிப்பணம் ரூபா 70 லட்சமும் மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டும். எனவே மந்திரி சபையின் விசேட அனுமதியைப்பெற்று தேவைப்படும் தொகையை விரைவில் ஒதுக்கித்தருமாறு யாழ். மாவட்டப் பா. உ. கே நவரெத்தினம் கல்வி, உயர் கல்வி அமைச்சர் அத்துலத்முதலியைக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கல்வித்திணைக்களம் யாழ். மாவட்டத்தில் உள்ள பெரிய திணைக்களங்களில் ஒன்று அதற்கென்று தனியாக ஒரு திணைக்களக் கட்டிடம் இல்லை. முன்னாள் நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பழைய கட்டிடத்திலேயே திணைக்களம் இயங்கி வருகிறது.

நுண்கலை போன்ற துறைகள் அங்கு இயங்கி வருவதாகவும், மகாநாட்டு மண்டபம், உத்தியோகத்தர் விடுதி, வேறு அடிப்படை வசதிகள் தற்போதைய கட்டிடத்தில் இல்லாததால். ஒரு திணைக்களத்துக்கான கட்டிடம் அவசிய, அவசரத் தேவை என்று திரு. நவரெத்தினம் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன் விஜேரத்னாவைக் கண்டித்து கொழும்பில் பத்திரிகையாளர் சங்கம் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தி ஐலன்ட் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் நிருபர் ஒரு கேள்வியைப் பல்வேறு கோணங்களில் அமைச்சரிடம்கேட்டிருந்தார். ஆத்திரமடைந்த அமைச்சர் ரஞ்சன் பத்திரிகை நிருபரை வெளிக்கடை ஜெயிலுக்குள் தள்ளப்போவதாகமிரட்டியுள்ளார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் மேற்படி கூற்றைக் கண்டித்துப் பத்திரிகையாளர் சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

## வட்ட அவை

தம்பிலுவில் - திருக்கோவில் பிரிவுக்குட்பட்ட பத்து சிற்றூரவைகளை உள்ளடக்கிய வட்ட அவைக் கூட்ட அங்குரார்ப்பணம் கடந்த 24 ஆம் திகதி பகுதிப் பொறுப்பாளர் திரு. மதன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி அவையின் தலைவராக திரு. சோ.சுந்தரமூர்த்தியும், செயலாளராக திரு.கி. பரராசசிங்கமும், பொருளாளராக திருமதி வி, சாம்பசிவம் அவர்களும், துணைத் தலைவராக திரு. எஸ் பொடிசிங்கம் அவர்களும், துணைச் செயலாளராக திரு இ. வேலுப்பிள்ளை அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாக சபை அங்கத்தவர்கள் ஐவர் வருமாறு:

திருமதி ந. பூமணி, சோ. பாக்கியராசா, மு' வேலுப்பிள்ளை, வே. காளிதாஸ், க. எதிர்மன்னசிங்கம்.

## பசுபிக் பிராந்திய அழகிப்போட்டி

(மாஸ்கோ)

பசுபிக் பிராந்திய அழகிப் போட்டி விளாடிவஸ்தோக் நகரில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ளது.

இரண்டாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வீடியோ சாதனங்கள் அழகுசாதனப் பொருட்கள் ஆபரணங்கள், வெளிநாட்டுப் பயணத்துக்கான பயணச் சீட்டுக்கள் ஆகியவை பரிசாக வழங்கப்படும்.

## 1990 உலகக்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வென்றவர்கள். இவர்கள் இம்முறைவென்றால் பிரேசில் இத்தாலியுடன் இவர்களும் சாதனையாளராகச் சேர்க்கப்படுவார்கள். மே. ஜேர்மனி 3 முறை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று 2 ஆம் இடம் பெற்றவர்கள் எனவே இம்முறை இவர்களை இடையில் நிறுத்திவிட முடியாது.

**யாருக்கு இந்த வெற்றிக் கிண்ணம்?**

சிலருடைய ஊகங்களின்படி இறுதி நான்கு நாடுகளும் இத்தாலி, ஆர்ஜென்டீனா பிரேசில், இங்கிலாந்தாக இருக்கும் என்கிறார்கள். இன்னும்சிலர் இத்தாலி ஆர்ஜென்டீனா இறுதியாட்டத்தில் இத்தாலி சாம்பியன் என்றும் ஆரூடம் கூறுகிறார்கள். இன்னும் சிலர் இம்முறை கிண்ணம் தென் அமெரிக்காவிலேயே தங்கும் அதாவது பிரேசில் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்ளும் என்கிறார்கள்.

இன்னும் சிலர் நெதர்லாந்தை ஒரு அச்சத்துடன் பார்க்கிறார்கள். ஏனெனில்

# பள்ளிக்கூடங்களில் சமயச் சபை

(யாழ்நகர்)

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் சமயக் கல்விச் சபைகள் அமைக்கப்பட உள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான சுற்று நிருபங்கள் கல்வி இராஜாங்க அமைச்சு அலுவலகத்தினால் கல்வித் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

யாழ். கல்வித்திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சமயச்சபைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாகமேற்கொண்டுவருகின்றது.

இச்சமயசபையில்,ஆசிரியர், அதிபர், பெற்றோர், நலன் விரும்பிகள், மாணவர் பிரதிநிதிகள். சமயப்பெரியார்கள் போன்றோர் அங்கம் வகிக்க முடியும்.

பாடசாலை அதிபர் சமயச் சபையின் தலைவராகவும் ஆசிரியர் ஒருவர் செயலாளராகவும் இருப்பார்கள். (52)

மேஜர் முரளி

# ஞாபகார்த்த புதிர்ப்போட்டி

# யாழ். இந்து அதிபராக குகதாசன் பதவி ஏற்றார்

# பள்ளிக்கூடங்களில் சமயச் சபை

(யாழ்நகர்)

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் சமயக் கல்விச் சபைகள் அமைக்கப்பட உள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான சுற்று நிருபங்கள் கல்வி இராஜாங்க அமைச்சு அலுவலகத்தினால் கல்வித் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். கல்வித்திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சமயச்சபைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாகமேற் கொண்டுவருகின்றது.

இச்சமயசபையில், ஆசிரியர், அதிபர், பெற்றோர், நலன் விரும்பிகள், மாணவர் பிரதிநிதிகள். சமயப்பெரியார்கள் போன்றோர் அங்கம் வகிக்க முடியும்.

பாடசாலை அதிபர் சமயச் சபையின் தலைவராகவும் ஆசிரியர் ஒருவர் செயலாளராகவும் இருப்பார்கள். (52)

முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பத்து லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார்கள் மிகுதிப்பணம் ரூபா 70 லட்சமும் மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டும். எனவே மந்திரி சபையின் விசேட அனுமதியைப் பெற்று தேவைப்படும் தொகையை விரைவில் ஒதுக்கித்தருமாறு யாழ். மாவட்டப் பா. உ. கே நவரெத்தினம் கல்வி, உயர் கல்வி அமைச்சர் அத்துலத்முதலியைக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரி

யின் பழைய கட்டிடத்திலேயே திணைக்களம் இயங்கி வருகிறது.

நுண்கலை போன்ற துறைகள் அங்கு இயங்கி வருவதாகவும், மகாநாட்டு மண்டபம், உத்தியோகத்தர் விடுதி, வேறு அடிப்படை வசதிகள் தற்போதைய கட்டிடத்தில் இல்லாததால், ஒரு திணைக்களத்துக்கான கட்டிடம் அவசிய, அவசரத் தேவை என்று திரு. நவரெத்தினம் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தி ஐலன்ட் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் நிருபர் ஒரு கேள்வியைப் பல்வேறு கோணங்களில் அமைச்சரிடம் கேட்டிருந்தார். ஆத்திரமடைந்த அமைச்சர் ரஞ்சன் பத்திரிகை நிருபரை வெலிக்கடை ஜெயிலுக்குள் தள்ளப்போவதாக மிரட்டியுள்ளார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் மேற்படி கூற்றைக் கண்டித்துப் பத்திரிகையாளர் சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

வராக திரு. சோ. சுந்தரமூர்த்தியும், செயலாளராக திரு. கி. பரராசசிங்கமும், பொருளாளராக திருமதி வி. சாம்பசிவம் அவர்களும், துணைத் தலைவராக திரு. எஸ் பொடிசிங்கம் அவர்களும், துணைச் செயலாளராக திரு இ. வேலுப்பிள்ளை அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாக சபை அங்கத்தவர்கள் ஐவர் வருமாறு:

திருமதி ந. பூமணி, சோ. பாக்கியராசா, மூ வேலுப்பிள்ளை, வே. காளிதாஸ், க. எதிர்மன்னசிங்கம்.

நிறுத்திவிட முடியாது.

**யாருக்கு இந்த வெற்றிக் கிண்ணம்?**

சிலருடைய ஊகங்களின்படி இறுதி நான்கு நாடுகளும் இத்தாலி, ஆர்ஜென்டீனா பிரேசில், இங்கிலாந்தாக இருக்கும் என்கிறார்கள். இன்னும்சிலர் இத்தாலி ஆர்ஜென்டீனா இறுதியாட்டத்தில் இத்தாலி சாம்பியன் என்றும் ஆரூடம் கூறுகிறார்கள். இன்னும் சிலர் இம்முறை கிண்ணம் தென் அமெரிக்காவிலேயே தங்கும் அதாவது பிரேசில் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்ளும் என்கிறார்கள்.

இன்னும் சிலர் நெதர்லாந்தை ஒரு அச்சத்துடன் பார்க்கிறார்கள். ஏனெனில் 1974, 78 ஐ தொடர்ந்து இருமுறை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றவர்கள். அதேவேளை இன்னொரு சுப்பர்ஸ்டாராகப் போகும் மார்க் வன் பஸ்டன் இவ் அணியைச் சேர்ந்தவர்.

மொத்தத்தில் இப்படியான ஊகங்கள் தற்போதைக்கு மிகவும் சுவையானவை மட்டுமே ஜூலை 8 ஆம் திகதி எந்த இரு அணிகள் களத்தில் நிற்கப்போகின்றன என்பதை தற்போதைக்குயாரும் உறுதிப்படுத்திவிட முடியாது. ஏனெனில் பங்குபற்றும் நாடுகளில் முதல்வரிசை நாடுகளில் எல்லாமே சமமானவை அப்படியாயின் சமமானவருள் முதல்வர் யார்? இன்னும் ஒரு மாதம் காத்திருப்போம்.


## விக்னா டியூசன் சென்ரர்

52. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**91 DAY CLASSES**
(8-00 - 1-00)

அலகு 1 இலிருந்து ஆரம்பமாகும்.
**(12-6-1990)**

மு. குறிப்பு. (1) எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
(2) முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.
(3) முற்றிலும் பாடசாலை போன்றது.
(4) விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
(5) பரீட்சைகள் நடாத்தப்படும்.

(B1012)


மேஜர் முரளி

# ஞாபகார்த்த புதிர்ப்போட்டி முதலாம் சுற்று முடிவுகள்

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கமும், நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடாத்திய யாழ். மாவட்டப்பாடசாலைகளிற்கிடையிலான கோட்டமட்டத்திலான புதிர்ப்போட்டிகளின் முதலாம் சுற்று கடந்த சனிக்கிழமை அன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணக் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம், மருதனாமடக் கோட்டம், ஆகியவற்றில் நடைபெற்ற போட்டிகளில் வேம்படி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, சன்மார்க்க மகாவித்தியாலயம், கதீஜா மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி, யூனியன் கல்லூரி, இளவாலை கொன்வென்ற், மல்லாகம் மகாவித்தியாலயம், மகாஜனாக் கல்லூரி, வீமன்காமம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஏழாலை மகாவித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, அச்சுவேலி மகாவித்தியாலயம் அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, உரும்பராய் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகள் இரண்டாம் சுற்றுப் போட்டிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளன. இம்மூன்று கோட்டங்களிலும் நடைபெற்ற போட்டிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிக புள்ளிகளைப்பெற்றுள்ளது. இப்போட்டிகளில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியைச்சேர்ந்த தி. கேசவன் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இரண்டாம் சுற்றுப்போட்டி நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

# யாழ். இந்து அதிபராக குகதாசன் பதவி ஏற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இரண்டு தேசியக் கல்லூரிகளில் ஒன்றான யாழ். இந்துக் கல்லூரியில் புதிய அதிபராகத் திரு. குகதாசன் நேற்றுக் காலை பதவி ஏற்றார். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய இவர் யாழ் இந்துக்லூரிக்கு கல்வி உயர்கல்வி அமைச்சின் பணிப்புரையின் பேரில் மாற்றப் பட்டார். இதே வேளை யாழ் இந்துக் கல்லூரியில் இதுவரை காலமும் அதிபராகக் கடமையாற்றிய திரு. பொன்னம்பலம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வாழ்க்கை அநித்தியம் கல்லூரி நித்தியம். நாடு எங்களுக்கு என்ன செய்தது என்று எண்ணாமல், நாட்டுக்கு என்று நினைத்து நாம் சேவை செய்ய வேண்டும். எல்லோருடனும் உடன்பாடாக மனச்சாட்சியுடன் நாம் நடந்து கொள்ள வேண்டும். என்று புதிய அதிபர் ஈழநாதத்திடம் தெரிவித்தார்.

## புதிய மண்டபம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு வீராமலை அருள் மிகு துர்க்கையம்பாள் ஆலயத்திற்கென சுமார் நாற்பதடி உயரமான புதிய மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றும்புதிய ஆலய மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி மண்டபம் அமைக்கப்படுவதனால் அடியார்கள் வசதியாகநின்று வழிபடக் கூடியதாய் இருக்கும். (22)


## ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES AIDE (MALE)**

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சி நெறி
**10. 06. 1990** இல் ஆரம்பமாகவுள்ளது.

பதிவுகளுக்கு:

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

B. 961



## தேவை

எமது நிறுவனத்தில் "பியோன்" வேலையிலீடுபட 18 - 30 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் தேவை.

O/L படித்த யாழ் நகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

11 - 06 - 90 பி. ப. 3 - 30 மணியளவில் தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் - 1 ஆம் மாடி)

(B 1015)



முதலாவது

## பிறந்த நாள் வாழ்த்து



கைதடி மேற்கைச் சேர்ந்த
**குணரட்ணம் விக்னேஸ்வரி**
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
**சனந்தன்**
இன்று (06-06-90)
தனது முதலாவது பிறந்த நாளை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தனது அம்மம்மா வீட்டில் கொண்டாடுகின்றார்
இவரை நோர்வேயில் இருக்கும்
அப்பா, அம்மா, ஹம்சாஜினி அக்கா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் பல்கலையும் பெற்று

பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

R-325

## சிந்தனைக்கு

ஏமாற்றுக்காரனை ஏமாற்றுவது
இரட்டிப்பு மகிழ்ச்சி

– கீன்தெலா:போன்தேன்


**ஏழநாதம்**

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 06-06-90

தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05


# வெளிநாட்டு மோசடி

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புத் தேடித்தரும் முகவர் நிலையங்கள் காளான்கள்போல முளைத்து இருக்கின்றன.

முகவர் நிலையங்கள் அதிகரித்துவரும் வேகத்தில் மோசடிகளும் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன.

பிரயாண முகவர்கள் என்ற பெயரில் வெளிநாட்டுப் போக்குவரத்துக்கு ஒழுங்கு செய்வதுடன் வேலைவாய்ப்புத் தேடித்தரும் முகவர்களாகவும் சில நிலையங்கள் செயல்படுகின்றன.

இந்தப் பிரயாண முகவர்களுக்கும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புத் தேடித் தருவதாக அறிவிக்கும் முகவர்களுக்கும் நெருங்கிய தொடர்புகளிருக்கின்றன.

வெளிநாட்டுப் பிரயாணமுகவர்களுக்கும் 'ஏயர்வேய்ஸ்' எனப்படும் விமான நிறுவனங்களுக்கும் தொடர்பு இருக்கின்றது.

'ஏயர்வேய்ஸ்' என்ற விமான நிறுவனங்களில் ஒருவர் நேரடியாக விமானப் பயணத்துக்கு டிக்கட் பெறமுடியாது.

இந்தப் பயண டிக்கட்டுகள் வெளிநாட்டுப் பிரயாண முகவர்கள் முன்னரே பதிவு செய்துவைத்துவிடுகிறார்கள்.

வேலைவாய்ப்பு முகவர்கள் பெருந்தொகைப் பணத்தை அப்பாவி இளைஞர்களிடமும் இளம் பெண்களிடமும் பெற்றுக் கொள்கிறார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் கொழுத்த சம்பளத்தில் வேலை தேடித்தருவதாகப் பணத்தைப்பெற்றுக்கொண்டு கொழும்பில் தங்கிவிடுவார்கள். இதேபோல் கனடா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேல்நாடுகளுக்கு அனுப்பிவைப்பதாகத் தெரிவித்தும் பெருந்தொகைப்பணத்தைப் பெற்றுக்கொண்டு முகவர்கள் கொழும்பில் தங்கிவிடுவார்கள்.

மூன்றுவாரத்தில் இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறுபவர்கள் மாதக்கணக்கில் மட்டுமல்ல வருடக்கணக்கிலும் காத்திருக்கச் செய்வார்கள்.

வீடுவளவுகளை ஈடுவைத்தும் நகைகளை ஈடுவைத்தும் அறாவட்டிக்குப் பணம் பெற்றும் முகவர்களிடம் கொடுத்துவிட்டுக் கொழும்பில் வருடக்கணக்கில் விடுதிகளில் தங்கியிருக்கும் இளைஞர்களும் யுவதிகளும் ஏராளம்.

இவர்கள் இப்படித் தங்கியிருப்பதால் தவறான வழிகளிலும் செல்லும் நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள்.

---

'றோ' என்ற உளவுப் பிரிவு மர்மங்கள் [3]

# உளவு ஸ்தாபனங்கள் இந்திய நலன் இன்றி ஆளும்கட்சியின் நலனுக்காக பயன்பட்டன

ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்துக்குப் பிறகு சிறை பிடிக்கப்பட்டு சயனைட் அருந்தி இறந்தவர்களில் ஒருவரான புலேந்திரன் தான் ராக்கெட் ஏவுகணைகளை இயக்கும் பயிற்சியை 'றோ' மூலமாகப் பெற்றவர். மேலும் பலருக்குப் பயிற்சி தரும்படி புலேந்திரன் கேட்ட போது அவரை அலைக்கழித்து விரட்டியது 'றோ'. சிலர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் முகவரிகளைக் கொடுத்து, அவர்களிடம் போய் பயிற்சி பெறும்படி 'றோ' கூறியது.

மாதக் கணக்கில் தமிழ்நாடு முழுவதும் புலேந்திரன் அலைந்

இப்போது ஒரு தமிழ்ப் பத்திரிகை நடத்தப்படுவதாகவும், ஒரு தமிழ் சினிமா கூட எடுக்கப்படுவதாகவும் தகவல்கள் வந்திருக்கின்றன.

இந்தியாவில் உளவு அமைப்புகள் தேசப் பாதுகாப்புக்குப் பயன்படுத்தப்படுவதை விட, ஆளுங்கட்சியின் பாதுகாப்புக்குப் பயன்படுவதே அதிகம், தேர்தல்களை வரவிடாமல் தடுக்கவே, விரைவு படுத்தவோ, நிலைமைக்குத் தக்கபடி வன்முறைகளை, ஜாதிக் கலவரங்களை, மதக் கலவரங்களைத் தூண்டி விட இந்த அமைப்புக்கள் வேலை செய்கின்றன. சென்ற வருடம் சட்டசபைத் தேர்தலுக்கு



படி கோரி தரப்பட்டதுதான்! ரிசர்வ் வங்கிக்கு எழுதப்பட்ட கடிதத்தை 1978 இல் ஜனதா ஆட்சிக் காலத்தின் போது கே.பி. உன்னிகிருஷ்ணன் அம்பலப்படுத்தினார். அப்போது தான் விவகாரம் வெளியே வந்தது.

இது கமிஷன் அல்ல...

ஆப்கானிஸ்தானில் அப்போது அரசுக்கெதிராகக் கிளர்ச்சி நடத்தி வந்த குழுக்களுக்கு ஆயுத உதவி செய்வதற்காக ஈரான் – இந்தியக் கூட்டுத் திட்டத்தின்படி, இந்துஜா மூலமாக அனுப்பப்பட்டது என்றும் சிலர் கூறு

கே. ஜி. பி. யின் செயல்பாடுகளில் மாற்றம் வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இப்போதுகே. ஜி. பி. அதிகாரிகள் மாதந்தோறும் பகிரங்கமாகப் பத்திரிகையாளர் கூட்டத்தில் கேள்விகளுக்குப் பதில் கூறுகிறார்கள். இந்தப்போக்கு ஆரோக்கியமானது என்று நைட்லி வர்ணித்துள்ளார்.

1977இல் ஜனதா ஆட்சியின் போது உளவுத்துறைகளின் செயற்பாடு பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு கொடுத்த அறிக்கை, இந்திரா மீண்டும் வந்தபிறகு கிடப்பில் போடப்பட்டது.

## பத்திரிகையாசிரியர் பதவி பறிபோகக்காரணமாயிருந்த "றோ"

உளவுத்துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் பிரச்சினைகள் உண்டுதானே....? ஆனால் போலீஸ்' உளவுப்பிரிவுகள் முதலியவற்றில் பணியாற்றுவோர் தொழிற்சங்கம் அமைக்க உரிமை கிடையாது

1978-79-இல் நாடு முழுவதும் எழுந்த பொலிஸார் கிளர்ச்சிக்குப்பிறகு ஐ பி. றோ அமைப்புகளிலும் அதிருப்தியாளர்கள் பகிரங்கமாக முணுமுணுக்கத் தொடங்கினார்கள்.

அரசாங்கமே ஊழியர் சங்கங்களை 'கவுன்சில்' என்ற பெயரில் ஐ. பி. யில்ஏற்படுத்தியது இதில் ஐ பி ஊழியர்கள் சேரவில்லை. தனியே ஐ. பி எம்ப்ளாயிஸ் அசோசியேஷனைத் தொடங்கினார்கள்.

இதை ஒடுக்க ராஜேஷ்வர் என்ற ஐ.பி. உயரதிகாரி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை (இவர்தான் மேற்குவங்க ஆளுநராகப் பிறகு பதவியேற்றார்)! ஐ. பி நிர்வாகத்தின் சார்பான ஐ. பி எம்ப்ளாயிஸ் வெல்ஃபேர் அசோசியேஷன் ஒன்று உருவாக்கப்பட்டது இரண்டு சங்கங்களும் சண்டையிடுவது ஐ. பி. யில் சாதாரண நிகழ்ச்சி.

'றோ' அமைப்பிலும் 1980 இல் ஊழியர் சங்கம் உருவாயிற்று. ஒரு ஊழியரை 1980 நவம்பரில் மேலதிகாரி அடித்ததைக் கண்டித்து ஸ்டிரைக்கூடச் செய்தார்கள். டெல்லி, பாட்னா, லக்னோ, அமிர்தசரஸ், ஸ்ரீநகர் ஆகிய இடங்களிலுள்ள 'றோ' அலுவலகங்கள் ஸ்டிரைக்கால் பாதிக்கப்பட்டன. பிறகு ஊழியர்களை சஸ்பெண்ட் செய்ததை எதிர்த்து வழங்குப் போட்டு வெற்றியும் பெற்றார்கள்.

'றோ' அமைப்பின்அதிருப்தியுற்றஊழியர்கள்சங்கம் என்ற அமைப்பால் ஒரு பத்திரிகையாசிரியர் அண்மையில் தனது பதவியையே இழந்தார்.

அமெரிக்க உளவு அமைப்பான சி. ஐ. ஏ. வின் ஏஜென்டாக மொரார்ஜி தேசாய் இருந்தார் என்று செய்தி வந்ததும் அதை எதிர்த்து தேசாய் வழக்குப் போட்டதும் தெரிந்ததே. சி. ஐ. ஏ ஏஜெண்டாக இருந்தது தேசாய் அல்ல... ஓய் பி.சவாண்தான் என்று

## விடுதலைப் புலிகளும் 'றோ' செய்த குளறுபடிகளும்

இலங்கைப் பிரச்சினையில் 'றோ' நடத்திய குளறுபடிகளிலேயே மிகவும் அபத்தமானதாக அமைந்தது இடுப்பு எலும்பும் கை கால்களும் உடைந்து சிகிச்சைபெற்று வந்த சில விடுதலைப்புலிகளைத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிடித்து வைத்த நிகழ்ச்சியாகும். இந்தியாவில் பல்வேறு நகரங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்களை இவர்கள் செய்யப் போவதாகக் கூறப்பட்டது!

ராஜீவ் ஜெயவர்த்தனா ஒப்பந்தம் போடப்பட்டு அமைதிப்படை புலிகள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்து ஓராண்டு கழித்து 1988 ஆகஸ்ட் மாதத்தில் அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி இருமுறை சென்னைக்கு வந்தார். அவர் புலிகளைக் கடுமையாக விமரிசித்துப் பேசிவிட்டுச்சென்ற அன்றிரவே சென்னையிலும் மதுரையிலும் 152 விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டார்கள்.

இவர்களில் பலரும் அரசாங்க மருந்துவமனையிலிருந்து நேரே சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்கள் சிறை பிடிக்கப்பட்ட அத்தனை பேரும் இந்தியாவுக்குக் கள்ளத்தோணியில் வந்ததாகவும் இங்கே வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் டிடென்ஷன் ஆர்டரில் கூறப்பட்டது.

ஆனால் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வந்த இவர்களில் பலரையும் இங்கு அழைத்து வந்ததே இந்திய அரசாங்கம் தான்! 1987 ஆகஸ்ட் 12ஆம் தேதியன்று சிங்கள ராணுவத் தாக்குதலில் காயமடைந்த 15 விடுதலைப் புலிகளை இந்திய விமானப்படை ஹெலிகாப்டரில் மதுரைக்கு அழைத்து வந்த புகைப்படம்கூடப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது அவர்ளெல்லாம் கைது செய்யப்பட்டார்கள்.

விதவிதமான காயங்கள் நோய்களுக்காக மதுரை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த புலிகளின் மெடிக்கல் ரெக்கார்டுகளிலேயே அவர்கள் மதுரைக்கு வந்த தேதி உட்பட குறிப்பிடப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான காஸ்ரோ சென்னையில் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்தவர். வவுனியாவில் புலிகள்பிடித்து வைத்திருந்த இந்திய ராணுவ வீரரை விடுவித்த நிகழ்ச்சிக்கு காஸ்ரோவை சென்னையிலிருந்து விசேட விமானத்தில் அழைத்துப் போய் திரும்பக் கொண்டு வந்ததும் அரசாங்கம்தான்!

'றோ' அதிகாரிகள் எந்த முறைகேடு பற்றியும் கவலைப்படாமல் நடவடிக்கை எடுத்தார்கள். மதுரை மாவட்ட கலெக்டர் புலிகளைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான உத்தரவு போடும் அதிகாரமே கலெக்டரிடம் கிடையாது என்பதைப் பற்றி கூட 'றோ' கவலைப்படவில்லை.

கடைசியில் இந்தச் சட்டக் குளறுபடியைச் சமாளிக்க, இன்னோர் அபத்தத்தில் தமிழக அரசு இறங்க வேண்டியதாயிற்று. சட்டப்படி அதிகாரமுள்ள தமிழக அரசின் டெபுடி செக்ரெட்டரி(ஏற்கனவே கைதானவர்களை மீண்டும் கைது செய்ய) இன்னோர் உத்தரவு போட்டார். இந்த உத்தரவில், கலெக்டருக்கு உத்தரவிட அதிகார வரம்பு

பெண்களிடமும் பெற்றுக் கொள்கிறார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் கொழுத்த சம்பளத்தில் வேலை தேடித்தருவதாகப் பணத்தைப்பெற்றுக்கொண்டு கொழும்பில் தங்கிவிடுவார்கள். இதேபோல் கனடா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேல்நாடுகளுக்கு அனுப்பிவைப்பதாகத் தெரிவித்தும் பெருந்தொகைப்பணத்தைப் பெற்றுக்கொண்டு முகவர்கள் கொழும்பில் தங்கிவிடுவார்கள்.

மூன்றுவாரத்தில் இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறுபவர்கள் மாதக்கணக்கில் மட்டுமல்ல வருடக்கணக்கிலும் காத்திருக்கச் செய்வார்கள்.

வீடுவளவுகளை ஈடுவைத்தும் நகைகளை ஈடுவைத்தும் அறாவட்டிக்குப் பணம் பெற்றும் முகவர்களிடம் கொடுத்துவிட்டுக் கொழும்பில் வருடக்கணக்கில் விடுதிகளில் தங்கியிருக்கும் இளைஞர்களும் யுவதிகளும் ஏராளம்.

இவர்கள் இப்படித் தங்கியிருப்பதால் தவறான வழிகளிலும் செல்லும் நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள்.

முகவர்களுக்குக் கொடுத்தபணம் போகக் கொழும்பில் தங்கிநின்று செலவிடும் தொகை மேலும் அதிகம்.

பணம் கொடுத்தவர்கள் நெருக்குதல் கொடுத்ததும் நிலைமையைச் சமாளிப்பதற்காக சிலரை குறிப்பிட்ட நாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து விமானத்தில் ஏற்றி, கூடவே ஒருவரைத் துணைக்கும் அனுப்புவார்.

துணையாகக் கூட்டிச் செல்லுபவர் இவர்களை பம்பாய் அல்லது கல்கத்தாவிற்குக் கூட்டிச் சென்று ஹோட்டல்களில் தங்கவைத்துவிட்டுத் தலைமறைவாகி விடுவார். முகவருக்குக் கொடுத்த பணம் போகக் கொழும்பில் தங்கி செலவு செய்து பின்னர் முன்பின் தெரியாத நகரில் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் அலைந்து பின்னர் வீட்டுக்குக் கடிதம் எழுதிப் பணம் பெற்று நாடு திரும்புபவர்களுமுண்டு.

வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு மணம்பேசிப் பெற்றோர் பெருந்தொகைப் பணத்தைச் சீதனமாகப் பெற்று மணமகளை வெளிநாட்டுக்குஅனுப்புவதற்குமுகவர்களிடம் பெருந்தொகைப் பணத்தைக் கொடுக்கிறார்கள்.

முகவர்களை நம்பி பணத்தை மட்டுமல்ல பெண்ணையுமே அவர்களிடம் கொடுக்கிறார்கள். சில பெண்கள் பாதி வழியில் சென்று ஹோட்டல்களில் தங்கி மானத்தையே இழந்துவிடுகிறார்கள்; சிலர் பாதி வழியில் தங்கித் திரும்பிவிடுகிறார்கள்; ஆயிரத்தில் ஒருவரே தங்கள் இலக்கை அடைகிறார்கள்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பிலும்சரி வெளிநாட்டு மாப்பிள்ளையை மணக்கச் செல்வதிலும் சரி ஏமாற்றப்படுபவர்கள் நூற்றுக்குத்தொண்ணூற்றொன்பது வீதமானவர்கள் பெண்களே என்று துணிந்துசொல்லலாம்.

இலட்சக்கணக்கில் பொதுமக்களின் பணத்தை வேலைவாய்ப்புத் தேடித் தருவதாகச் சொல்லி ஏமாற்றி மோசடி செய்த சில முகவர்கள் நாட்டைவிட்டே சென்ற சம்பவங்களுமுண்டு.

ஏமாற்றத்தின் உச்சிக்கே சென்ற ஒருவர்தான் முகவர் ஒருவரின் சகோதரன் பிள்ளையைக் கடத்திச் சென்று இரண்டுலட்சம் ரூபாய் பணயப் பணமாகக் கேட்கவேண்டி வந்தது.

பிள்ளையைக் கடத்தியது நியாயமாகாதென்றாலும் இதர முகவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தமிழ்ப் பத்திரிகைகளில்தான் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் விளம்பரங்கள் தொகையாக வெளிவருவதிலிருந்து தமிழ் மக்களை முகவர்கள் எவ்வளவு ஏமாளிகளாகக் கருதுகிறார்களென்பது தெளிவு.

ஆனால் இனியும் ஏமாளிகளல்ல என்பதற்கு பிள்ளைக் கடத்தல் ஒரு சான்று!

---

மேற்குவங்க ஆளுநராகப் பிறகு பதவியேற்றார்). ஐ. பி நிர்வாகத்தின் சார்பான ஐ. பி எம்ப்ளாயிஸ் வெல்ஃபேர் அசோசியேஷன் ஒன்று உருவாக்கப்பட்டது இரண்டு சங்கங்களும் சண்டையிடுவது ஐ. பி. யில் சாதாரண நிகழ்ச்சி.

'றோ' அமைப்பிலும் 1980 இல் ஊழியர் சங்கம் உருவாயிற்று. ஒரு ஊழியரை 1980 நவம்பரில் மேலதிகாரி அடித்ததைக் கண்டித்து ஸ்டிரைக்கூடச் செய்தார்கள். டெல்லி, பாட்னா, லக்னோ, அமிர்தசரஸ், ஸ்ரீநகர் ஆகிய இடங்களிலுள்ள 'றோ' அலுவலகங்கள் ஸ்டிரைக்கால் பாதிக்கப்பட்டன. பிறகு ஊழியர்களை சஸ்பெண்ட் செய்ததை எதிர்த்து வழங்குப் போட்டு வெற்றியும் பெற்றார்கள்.

'றோ' அமைப்பின்அதிருப்தியுற்றஊழியர்கள்சங்கம் என்ற அமைப்பால் ஒரு பத்திரிகையாசிரியர் அண்மையில் தனது பதவியையே இழந்தார்.

அமெரிக்க உளவு அமைப்பான சி. ஐ. ஏ. வின் ஏஜென்டாக மொரார்ஜி தேசாய் இருந்தார் என்று செய்தி வந்ததும் அதை எதிர்த்து தேசாய் வழக்குப் போட்டதும் தெரிந்ததே. சி. ஐ. ஏ ஏஜெண்டாக இருந்தது தேசாய் அல்ல... ஒய் பி.சவாண்தான் என்று பம்பாய் ஆங்கில தினசரி 'இண்டிபெண்டண்ட்' செய்தி வெளியிட்டது. இதற்குக் கடும் எதிர்ப்பு மக்களிடமிருந்து வரவே ஆசிரியர் வினோத் மேத்தா பதவியிலிருந்து ராஜினாமா செய்தார். சவான் பற்றிச் செய்தி கொடுத்தது 'றோ' ஊழியர்கள்!

---

தேதியன்று சிங்கள ராணுவத் தாக்குதலில் காயமடைந்த 15 விடுதலைப் புலிகளை இந்திய விமானப்படை ஹெலிகாப்டரில் மதுரைக்கு அழைத்து வந்த புகைப்படம்கூடப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது அவர்ளெல்லாம் கைது செய்யப்பட்டார்கள்.

விதவிதமான காயங்கள் நோய்களுக்காக மதுரை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த புலிகளின் மெடிக்கல் ரெக்கார்டுகளிலேயே அவர்கள் மதுரைக்கு வந்த தேதி உட்பட குறிப்பிடப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான காஸ்ரோ சென்னையில் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்தவர். வவுனியாவில் புலிகள்பிடித்து வைத்திருந்த இந்திய ராணுவ வீரரை விடுவித்த நிகழ்ச்சிக்கு காஸ்ரோவை சென்னையிலிருந்து விசேட விமானத்தில் அழைத்துப் போய் திரும்பக் கொண்டு வந்ததும் அரசாங்கம்தான்!

'றோ' அதிகாரிகள் எந்த முறைகேடு பற்றியும் கவலைப்படாமல் நடவடிக்கை எடுத்தார்கள். மதுரை மாவட்ட கலெக்டர் புலிகளைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான உத்தரவு போடும் அதிகாரமே கலெக்டரிடம் கிடையாது என்பதைப் பற்றி கூட 'றோ' கவலைப்படவில்லை.

கடைசியில் இந்தச் சட்டக் குளறுபடியைச் சமாளிக்க, இன்னோர் அபத்தத்தில் தமிழக அரசு இறங்க வேண்டியதாயிற்று. சட்டப்படி அதிகாரமுள்ள தமிழக அரசின் டெபுடி செக்ரெட்டரி(ஏற்கனவே கைதானவர்களை மீண்டும் கைது செய்ய) இன்னோர் உத்தரவு போட்டார். இந்த உத்தரவில், கலெக்டருக்கு உத்தரவிட அதிகார வரம்பு இல்லை என்பதும் குறிபபிடப்பட்டது.

திராவிடர் கழகம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. சுப்ரீம் கோட்டிலும் ரிட் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதற்குள்ளாக வீட்டுக்காவலிலிருந்த கிட்டு உண்ணாவிரதம் மேற்கொள்ளவே, அவரையும் கைதானவர்களையும் இந்திய அரசு அவசர அவசரமாக யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் கொண்டுபோய் இறக்கி விட்டுவிட்டு விவகாரத்திலிருந்து ஒரு வழியாகக் கழட்டிக் கொண்டது.

சுப்ரீம் கோர்ட்டில் மட்டும் ஹேபியஸ் கார்ப்பஸ் மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்திருந்தால், நிலைமை மேலும் சிக்கலாகியிருக்கும். அதிகார வரம்பில்லால கலெக்டரின் உத்தரவின்கீழ் தடுப்புக்காவலில் ஒருவரை வைத்திருந்ததற்காகப் பல லட்ச ரூபாய் நஷ்டஈடு கூடக் கேட்டு வாங்கியிருக்க முடியும். வேறு பல ஹேபியஸ் கார்ப்பஸ் மனுக்களில் சுப்ரீம் கோர்ட் இவ்வாறு நஷ்டஈடு வழங்கியிருக்கிறது.

---

தார். பல முகவரிகளில் அப்படி ஆளே இல்லை. இருந்த ஆட்கள் பலரும் இராணுவத்துக்கு நவீன ராக்கெட ஏவுகணை வருவதற்கு முன்பே ரிடையராகி விட்டவர்கள்.

ஒப்பந்தத்தை ஆதரிக்க ஐம்பது லட்ச ரூபாய் பிரபாகரனுக்குத் தரலாம் என்று அரிய யோசனையும் 'றோ' வுடையது தான். அதுவும் வேலை செய்யவில்லை. தவிர, டிக்சித்திடம் திரேன் பகத் எடுத்த பேட்டியில் விஷயம் அம்பலமாகிப் பெயரையும் கெடுத்தது.

'றோ' உட்பட உளவு அமைப்புகளுக்காக ஒதுக்கப்படும் பணம ஏராளம். இதில் கணக்கில் வராத பணம் கணிசமானது. இலங்கை விவகாரத்துக்காக தரப்பட்ட பணத்தில் முன்பாக, தி. மு. கழகத் தலைவர் கருணாநிதி 'றோ' மீது பகிரங்கமாகவே குற்றம் சாட்டினார்.

ஆளுங்கட்சி நலனுக்காக 'றோ' செயல்படுவதாகப் புகார்கள் வருவது ஒன்றும் அண்மைக் கால நிகழ்ச்சியல்ல... பதினைந்து வருடங்களுக்கு முன்பே ஒரு சர்வதேச பேரத்தில் 'றோ' பெயர் அடிபட்டது.

அவசரநிலை காலத்தின் போது இந்திராவுக்கும் சஞ்சய் காந்திக்கும் நெருக்கமாக இருந்தஅமைப்பு உண்மையில் 'றோ' தான். அப்போது இநது ஜாக்களுடன்நடந்தஒரு பேரத்தில் 'றோ' முக்கியமான பங்காற்றியது.

இன்று போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் தொடர்புள்ளவர்கள் என்று வர்ணிக்கப்படும் அதே இந்துஜா சகோதரர்கள், அப்போது சஞ்சய் காந்திக்கும் ஈரான் மன்னர் ஷாவுக்கும் மிகவும் வேண்டியவர்களாக இருந்தார்கள்.

இந்துஜாக்களின் வெளிநாட்டுக் கணக்கில் இந்திய அரசாங்கப் பணம் சுமார் பதினான்கு கோடி ரூபாய் அந்நியச் செலாவணியில் செலுத்தப்பட்டது. பணத்தை வெளிநாட்டுக்கு எடுத்துச் சென்றதே 'றோ' அமைப்பின் உயரதிகாரியான ரன்சங்க நாயர் என்பவர் தான்.

ஈரானுக்கும் இந்தியாவுக்குமிடையே அப்போது நடந்த வர்த்தகப் பேரங்களில் இந்துஜாக்களுக்கு கமிஷனாக இந்தப் பணம் தரப்பட்டதாகச் சிலர் கருதுகிறார்கள்.

பெட்ரோலிய விலை உயர்வைச் சமாளிப்பதற்காக இந்தியாவுக்கு ஈரான் கடனாக 380 கோடி ரூபாய் தந்தது. பிறகு, இன்னொரு 325கோடி ரூபாயைக் கடனாக ஸ்டேட் பாங்கின் வளர்ச்சி திட்டத்களுக்காக ஈரான் கொடுத்தது. மூன்றாவது பேரம், கர்நாடகத்தில் குதிரைமுக இரும்புத்தாது திட்டத்துக்காக ஈரான் கடனாக 820 கோடி ரூபாய் கொடுத்ததாகும். மூன்றாவது பேரத்துக்கான கமிஷன்தான் இந்துஜாக்களுக்குத் தரப்பட்ட பணம் எனப்படுகிறது.

பதினான்கு கோடி ரூபாய் பணமும் பகிரங்கமாக வெளியுறவுச் செயலாளர் ரிசர்வ் வங்கிக்குக்கடிதம்எழுதி 'றோ' அதிகாரி நாயரிடம் ஸ்விஸ் நாட்டு கரன்ஸியாகத் தரும்கிறார்கள் ஆனால், இந்திய அரசின் வெளிநாட்டு உளவு குழப்ப வேலைகளுக்கு இந்துஜாக்களை நம்பிச் செயல்படும் அளவுக்கு அவர்களுக்குச் செல்வாக்கு இருந்ததாகத் தெரியவில்லை. பணம் முழுவதும் மீண்டும் இந்திரா குடும்பத்துக்கே வந்துவிட்டது என்றும் வதந்திகள் பரவின.

உளவு அமைப்புகளை அரசியல் கட்சிகள் தங்கள் நன்மைக்குப் பயன்படுத்துவது இன்னும் பெரிய ஆபத்தில் கொண்டு விட்டுவிடும். ஒரு கட்டத்தில், அரசாங்கத்தில் உள்ள ஆளுங்கட்சியையும் மீறி உளவு நிறுவனங்கள் தன்னிச்சையாகச் செயற்பட முடியும். இதற்கு ஆதாரமாகப் புகழ்பெற்ற ஆங்கிலப் பத்திரிகையாளர் பிலிப் நைட்லி - சி. ஐ. ஏ., கே ஜி. பி பற்றி எழுதிய நூலில் பல தகவல்களைக் கொடுத்திருக்கிறார். அமெரிக்க ஜனாதிபதியையும் சோவியத் தலைவரையும் மீறி சி ஐ. ஏ. யும் கே ஜி பியும் செயல்படும் நிலை இருந்திருக்கிறது. தங்கள் செல்வாக்கைக் குறைக்கப் பார்க்கும் அரசியல் தலைவர்களை அப்புறப்படு[illegible] ஒழித்துவிடும் அளவுக்[illegible]க்கு வலிமை வந்துவி[illegible]து என்கிறார் நைட்லி.

இந்த ஆபத்து ஏற்படாமலிருக்க, உளவு நிறுவனங்களைப் பற்றி மேலும் பகிரங்க விவாதம், பாராளுமன்றத் தணிக்கைகள் முதலியன தேவைப்படுகின்றன.

கோர்பசேவ் வருகைக்குப் பிறகு சோவியத் யூனியனி[illegible]ரா, ஐ. பி. உயரதிகாரிகள் பலர் மாற்றப்பட்டிருக்கின்றனர். சி பி.ஐ யில் ஏற்கனவே மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அஃபிஷியல் சீக்ரெட்ஸ் ஆக்ட் எனப்படும் அரசு ரகசியங்கள் பற்றிய சட்டத்தில் மாற்றங்களைச் செய்யப்போவதாக வி. பி.சிங் அறிவித்திருகிறார். சொன்னபடி இதில் மாற்றம் செய்தாலே முன்னைவிட உளவு அமைப்புகளின் ரகசியக் குழப்பவேலைகள் குறையும்! பொதுமக்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் பதில் சொல்ல வேண்டியதாகிவிடுமே!

நன்றி:

ஜூனியர் விகடன்

(முற்றும்)

---

# சட்ட விரோத விறகு வியாபாரம்

ஆசிரியர்,
ஈழநாதம்.

வவுனியா தொடங்கி கிளிநொச்சி வரை கண்டி வீதியில் மிகப் பெறுமதி வாய்ந்த மரங்கள் விறகிற்காக கண்மூடித்தனமாய் தறிக்கப்படுகின்றன. இது உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டும். அல்லாவிடின் கண்டி வீதியைச் சூழவுள்ள பிரதேசம் பாலை வனமாகக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.

இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் நேரடியாக உரையாடிய பொழுது தம்மிடம் 50 சதமளவில் கொள்வனவு செய்யும் லொறிச்சாரதிகளும் இ. போ. ச. நடத்துனர் சாரதிகளும் இவற்றை ரூ. 3-50 தொடக்கம் ரூ 4-50 வரை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்வதாக கூறினார்கள். உண்மையில் இங்கும் இடைத்தரகர்களே இலாப மீட்டுகின்றனர். உடனடியாக சட்ட விரோத மரங்கள் லொறிகள், மற்றும் பஸ்களில் யாழ்ப்பாணம் கொண்டு செல்வது தடைசெய்யப்பட வேண்டும்.

அதேவேளை ஏறத்தாழ 60 குடும்பங்கள் இந்த சட்ட விரோத தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுடன் தினமும் பல குடும்பங்கள் இணைந்து கொள்கின்றன.

இவர்கள் சொத்துடமையற்றவர்கள். இவர்கள் ஸ்தாபனமயப்படுத்தப்பட வேண்டும். இதனை தமிழீழத்தின் நலனின அக்கறையுடன் செயற்படுபவர்கள் தமிழீழ அகதிகளின் புனர் வாழ்விற்கான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளோர் இதற்கு வழி காட்டுவார்களா?

- பிறேம்

சாவகச்சேரி.

---

# பயிற்சிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் கட்புல சாதனங்கள் ஆக்கல் எனும் பயிற்சியில் சேர விரும்புவோர்க்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 9 மணிக்கு சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாசாலையில் நடைபெறும்.

ஏற்கனவே விண்ணப்பித்தோரும் மேலும் விண்ணப்பிக்க விரும்புவோரும் தமது விண்ணப்பங்களுடனும் சான்றிதழ்களுடனும் அந்நிலையத்திற்கு சமூகம் அளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

Registered us a News Paper at the G. P. O.

ஈழநாதம்

## பாடசாலையில் குண்டு வெடிப்பு ஐந்து பிள்ளைகள் மரணம்

(புதுடில்லி)

பஞ்சாப்மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து ஐந்து பாடசாலைப்பிள்ளைகள் உட்பட ஏழுபேர்வரை கொல்லப்பட்டனர்.

இங்குள்ள இந்துப் பாடசாலையொன்றில் மதவைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடம் பெற்ற குண்டுவெடிப்பில் ஐந்து பாடசாலை பிள்ளைகள் மரணமானார்கள்.

மற்றொரு சம்பவத்தில் ஸ்கூட்டர் ஒன்றில் குண்டு வெடித்ததால் இருவர் பலியானார்கள். பலர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் சீக்கிய தீவிரவாதிகளின்செயல் எனபொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஸ்கூட்டரில் சென்றவர்கள் வெடிகுண்டைக் கொண்டு சென்றபோது நேரம் தவறி வெடித்திருக்கலாம் என்றும் அவர்கள் சீக்கிய தீவிரவாதிகளே எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## தனியார் கல்வி நிறுவனப் பொதுக்கூட்டம்

தனியார் கல்வி நிறுவன ஒன்றிய யாழ். மாவட்டப் பொதுக் கூட்டம் நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பதிவு செய்த தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும் பிரத்தியேக வகுப்புகளுக்குரிய ஆசிரியர்களும் தவறாது இதில் கலந்து கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிபுணர்களில் இருந்து சிற்றூழியர்வரை

# மந்திகை ஆஸ்பத்திரியில் பற்றாக்குறை

## வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை

(மந்திகை)

வைத்திய நிபுணர்களிலிருந்து சிற்றூழியர்கள் வரைக்கும் பருத்தித்துறை ஆசினர் வைத்திய சாலையில் பற்றாக்குறை இருந்து வருகிறது என அவ் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி திரு சி. கதிரவேற்பிள்ளை கருத்து தெரிவித்துள்ளார்.

இவ் வைத்தியசாலையில் கடந்தகால வன்செயல்களுக்கு முன்பு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு வைத்திய அதிகாரிகள் இருந்தனர் வன்செயல்களினால் இவ்வதிகாரிகள் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டதனால் தற்போது வைத்திய நிபுணர்கள் இருவர் மட்டுமே உள்ளனர். ஆனால் பொது வைத்தியப் பணிக்கு இங்கு இப்பொழுது ஒரு வைத்தியர்களுமேஇல்லை அதே போல சத்திர சிகிச்சை பிரிவுக்கும் எவரும் இல்லை இதனால் இப்பொழுது பதினாறு வைத்திய உத்தியோகத்தர்கள் இருந்த இடத்திற்கு ஆரம்ப பயிற்சி நெறியை முடிக்காத பல்கலைகழக மருத்துவபீடத்திலிருந்து வெளியேறிய மாணவர்கள் நால்வர் இங்கு உதவிகள் செய்து வருகின்றனர் இவர்கள் பயிற்சி நெறியை முடிக்காது வைத்தியம் செய்வது ஒரு முறையற்ற செயலாகும் வைத்தியர்கள் துப்பரவாக இல்லாத நிலையிலும் பார்க்க இவர்கள் போன்ற வைத்திய அறிவுள்ள மாணவர்களின் உதவி இன்றியமையாததாக உள்ளது என்றும் அவ்வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மேலும் தற்போதுள்ள இவ் வைத்திய அதிகாரிகள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு தற்போதுள்ள ஒரு சில வைத்தியர்கள் மேலதிகமாக நேர அளவு பாராது வேலை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்ததுடன்வைத்தியசாலையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள வைத்திய அதிகாரிகளை மீண்டும் வேலைக்கு அழைத்து கொள்வதற்கும் ஆலோசனை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார் ஏற்கனவே இவ்வதிகாரிகள் ஓய்வூதியம் பெற்றும் பல ஆண்டுகள் வேலை செய்தவர்கள் என்றும் அவர் கூறினார்.

மேலதிகமாகவேலைசெய்து வரும் வைத்திய அதிகாரிகளுக்குபல்கலைக்கழக மாணவர்களுக்கும் மேலதிக சேவைப் படிவழங்குவதற்கும் தற்போது மாகாணசபை பதவி ஏற்றதைத் தொடர்ந்து நிதி தட்டுப்பாடு நிலவுவதாக கூறினார் மாகாண சபை பதவி ஏற்பதற்கு முன்பு எமது வைத்தியசாலை அதிகாரிகளின் மேலதிக ஊதியப்படி போதிய அளவு வந்து கொண்டிருந்தது ஆனால் இப்பொழுது எமக்கு ஒருலட்சத்தி அறுபத்தேழாயிரம் ரூபாவைத் தவிர எதுவித ஒதுக்கீடும் செய்யப்படவில்லை எனவும் திரு. கதிரவேற்பிள்ளை அவர்கள் கூறினார்.

சிற்றூழியர் பிரச்சினை பற்றி அவர் கூறும்பொழுது இது கடந்த பத்து வருடமாக இருந்து வரும் சாதாரணமான பிரச்சினை என்றார்.

கடந்த கால பிரச்சினையில் பிரான்ஸ் நாட்டு வைத்திய நிபுணர்களின் சேவை எமக்குபெரும்ஆறுதல் தந்தது மிக முக்கியமாக குறிப்பிட வேண்டியது என்றும் அவர் கூறினார்,

### நேற்று.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொது நிர்வாக உள்விவகார அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா 1971ல் 29ம் இலக்க விடுமுறை சட்டத்தை திருத்துவதற்கான சட்ட மூலத்தை சமர்ப்பித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் ஜெயக்கொடி இலங்கை ரோயல் இஸ்லாமிக் சட்டத்தை ஒன்றிணைப்பதற்கான சட்ட மூலத்தை கொண்டு வந்தார்.

அத்துடன் நேற்று பாராளுமன்றம் கூடிய போது தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி சாம் தம்பி முத்துவின் மறைவு குறித்து கொண்டு வரப்பட்ட அனுதாபப் பிரேரணைமீதான விவாதம் நடைபெற்றது.

சுற்றாடல் பாராளுமன்ற அமைச்சர் வின்சன்ட் பெரேரா இப் பிரேரணையை சமர்ப்பித்துப் பேசினார்.

### எமது.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் மக்கள் முன்னணிஅரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் அவர்களின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பொறுப்பாளர் செல்வி பாரதி பேசுயபோது எமது விடுதலைப் போராட்டத்தில்மாணவர் சாதித்தவை ஏராளம் இதேபோல அவர்கள் இன்னும் சாதிக்க வேண்டியவையும் ஏராளம் உள்ளது என்றார்.

மேலும்இக்கூட்டத்தில்தேவரண்ணா, கவிஞர் காசிஆனந்தன்உட்பட தியாகிசிவகுமாரனின் தாயும் உரையாற்றினார் இறுதியாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வலிகாமம் பொறுப்பாளர் ஆஞ்சநேயரின் நன்றியுரையுடன் முடிவடைந்தது (அ)

## "சமூக விஞ்ஞானச் சுடர்" நாளை வெளியீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து முதலாவதாக வெளியிடப்படும் 'சமூக விஞ்ஞானச் சுடர்' வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. நா. சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. சமூக விஞ்ஞானச் சுடர் ஆசிரியர் திரு. அ. கௌரிகாந்தனின் நூல் வெளியீட்டு விழாவில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், பேராசிரியர் கா. சிவத்தம்பி, தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி சிதிரலேகா மௌனகுரு, கல்வி அதிகாரி திரு. வேலாயுதபிள்ளை, ஜனாப். பா ச. மொகைதீன் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

திரு முத்து சிவலிங்கம், திரு. திருஞானம், திரு. விந்தன் ஆகியோர் திறனாய்வுரை நிகழ்த்துவர்.

வீரமரணமடைந்த வீர வேங்கை கப்டன் வண்ணனின் தந்தையான முத்துவேலு ஜீவரெத்தினம் முதற்பிரதியை வாங்குவார். (49)

### பாரிய

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

வற்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

### சிங்களப்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் கடந்த ஜனவரி மாதம் முதல் தமிழ் போதிக்கப்பட்டு வருகிறது.

இதேபோல இப்பகுதியில் உள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளிலும் சிங்களமொழி போதிக்கப்படவுள்ளது.

## ரயில்கள் மோதுண்டதால் 11பேர் பலி; 40பேர் காயம்

(ஹைதராபாத்)

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற நேற்று முன்தினம்இரவு ரயில் விபத்து தொன்றில 11 பேர் வரை இறந்துள்ளனர். 40

லுடன் மோதியதால் தடம் புரண்டது.

ஆறு பெட்டிகள் இதனால் சிதைவடைந்துள்ளன. இன்னும் இரண்டு பெட்டிகள் திறக்கப்படாமலே இருப்

## இரத்தினக்கல் பார்சல்

## மூன்று தபால் ஊழியரைப் பொலிஸார் தேடுகின்றனர்

(கொழும்பு)

கடந்த வாரம் இரத்தினக் கல் மறைக்கப்பட்டு வெளி நாட்டுக்கு அனுப்பப்பட்ட பார்சல் தொடர்பாக மூன்று சிரேஷ்ட தபால் திணைக்கள ஊழியர்கள் பொலிஸாரால் தேடப்படுகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை 50 லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களை மறைத்து அனுப்பிய பார்சல் ஒன்றைச் சுங்கப் பகுதியினர் கண்டு பிடித்தனர்.

விசாரணைகளின் பின்னர் இரு தபால் அதிபர்களும், ஏஜன்சி தபால் அதிபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டதையடுத்தே இந்த மூவரும் தலைமறைவாகியுள்ளனர்.

தபால் ஊழியர்களின் உதவியுடன் இந்தக் கடத்தல் அண்மைக் காலமாக நடைபெற்று வந்துள்ளது எனவும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

### தலைமன்னார் . . .

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

தொடர்ந்தும் நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழர் பகுதியிலுள்ள பிரச்சினைகள் இன்னும் தீராததினால் தலைமன்னாருக்கு கப்பல் செல்

## காணவில்லை

சுமார் 13 வயது மதிக்கத்தக்கதும், கண்டி நகரை பிறப்பிடமாகக் கொண்டவருமான சிறுமி ஒருவர் கடந்த 28.5.90 ஆந் திகதிதொடக்கம் செம்பியன்லேன், கொக்குவிலிலிருந்து காணாமல் போய்விட்டார் உயரம் சுமார் 3 1/2 அடி நிறம் கருமை. தலைமயிர் கருமை நிறமுடையவர் பெயர் தெரியாத மேற்படி கூறப்பட்ட அடையாளங்களுடைய சிறுமியை எங்கேயேனும் காண்பவர்கள் தயவு செய்து P. சுத்தானந்தன் செம்பியன் லேன் கொக்குவில் அல்லது S. P. S போக்குவரத்து சேவை 27 விக்டோறியா வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும் தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(R/340)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



யர் திரு. அ. கௌரிகாந்த னின் நூல் வெளியீட்டு விழா வில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்க வாசகர், பேராசிரியர் கா. சிவத்தம்பி, தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு தி சித திரலேகா மௌனகுரு, கல்வி அதிகாரி திரு. வேலாயுத பிள்ளை, ஜனாப். பா ச. மொகைதீன் ஆகியோர் ஆசி யுரை நிகழ்த்துவர்.

---

**பாரிய**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

வற்றை அமைப்பதற்கு நட வடிக்கை மேற் கொள்ளப் படும் எனவும் அவர் தெரி வித்தார்.

இதன் மூலம் யாழ். மாவட்ட இளைஞர் யுவதி களுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும். இதனால் எமது பகுதி பொருளாதார வளர்ச்சியுற வாய்ப்புண்டு எனவும்அவர் கூறினார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் கடந்த ஜனவரி மாதம் முதல் தமிழ் போதிக்கப்பட்டு வருகிறது.

இதுபோல இப்பகுதியில் உள்ள தமிழ், முஸ்லிம் பாட சாலைகளிலும் சிங்களமொழி போதிக்கப்படவுள்ளது.

# பொலிஸார் தேடுகின்றனர்

(கொழும்பு)

கடந்த வாரம் இரத்தினக் கல் மறைக்கப்பட்டு வெளி நாட்டுக்கு அனுப்பப்பட்ட பார்சல் தொடர்பாக மூன்று சிரேஷ்ட தபால் திணைக்கள ஊழியர்கள் பொலிஸாரால் தேடப்படுகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை 50 லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களை மறைத்து அனுப்பிய பார்சல் ஒன்றைச் சுங்கப் பகுதியினர் கண்டு பிடித்தனர்.

விசாரணைகளின் பின்னர் இரு தபால் அதிபர்களும், ஏஜன்சி தபால் அதிபர் ஒரு வரும் கைதுசெய்யப்பட்டதை யடுத்தே இந்த மூவரும் தலைமறைவாகியுள்ளனர்.

தபால் ஊழியர்களின் உதவி யுடன் இந்தக் கடத்தல் அண் மைக் காலமாக நடைபெற்று வந்துள்ளது எனவும் விசா ரணையிலிருந்து தெரியவந் துள்ளது.

# ரயில்கள் மோதுண்டதால் 11பேர் பலி; 40பேர் காயம்

(ஹைதராபாத்)

இந்தியாவின் ஆந்திரப் பிர தேசத்தில் நடைபெற்ற நேற்று முன்தினம்இரவு ரயில் விபத்து தொடரில் 11 பேர் வரை இறந்துள்ளனர். 40 பேர் வரை காயமடைந்துள் ளனர்.

ஆந்திரப் பிரதேசமாகிய சிக்கந்தராபாத்தில் இருந்து பம்பாய்க்கு சென்றுகொண்டி ருந்த விடுமுறை விசேட ரயில் சரக்குகளை ஏற்றி வந்த ரயி லுடன் மோதியதால் தடம் புரண்டது.

ஆறு பெட்டிகள் இதனால் சிதைவடைந்துள்ளன. இன் னும் இரண்டு பெட்டிகள் திறக்கப்படாமலே இருப் பதால் இந்த விபத்தில் இறந்துபோயிருப்போர் எண் ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் என எதிர்பார்க் கப்படுகிறது.

ஆந்திர மானில நிதியமைச் சர், மத்திய ரயில்வே துணை அமைச்சர் அகித்சிங் ரயில்வே சபையின் தலைவர் ஆகியோர் விபத்து நடந்த இடத்தை உடன் சென்று பார்வையிட் டனர்.

மேலும் தற்போது அமெ ரிக்காவில் இருக்கும் ஆந்திர முதலமைச்சர் சென்னா ரெட்டி இவ் விபத்துக் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த துடன், மீட்பு நடவடிக்கை கள் எடுப்பதற்கு மாநில அரசு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் பணித்திருக்கி றார்.

---

**பொலிஸ்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி நெறி நடைபெறும். ஏனைய இடங்களில் கான்ஸ் டபிள்களுக்கு பயிற்சி நெறி நடாத்தப்படும்.

இரண்டு மாதங்கள் பயிற்சி நடாத்தப்பட்டு அவர்களுக் குரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு வட-கிழக்கி லுள்ள பொலிஸ் நிலையங்க ளில் கடமைக்கு அமர்த்தப் படுவர் எனவும் திரு. ஆனந்த ராசா தெரிவித்தார்.

இதேவேளை இரண்டாவது கட்ட நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு வட-கிழக்கிலிருந்து சுமார் 2000 பேர் தோற்றவுள்ளனர். இந்த நேர்முகப் பரீட்சை மூன்று இடங்களில் மாத்திரம் நடைபெறவுள்ளது. யாழ்ப் பாணத்தில் சிரேஷ்ட பொ லிஸ் அத்தியட்சகர் திரு ஜோசப் தலைமையிலும், திருக் கோணமலையில் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜோர்ஜ் நிக்கலஸ் தலைமையிலும் அம் பாறையில் பொலிஸ் அத்தி யட்சகர் திரு. எஸ். மனோ கரன் தலைமையில் இந்த நேர்முகப் பரீட்சைகள் நடை பெறவுள்ளன. (67)

---

**தலைமன்னார் . . .**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் நிறுத்தப்பட் டுள்ளது. இலங்கையில் தமிழர் பகுதியிலுள்ள பிரச்சினைகள் இன்னும் தீராததினால் தலை மன்னாருக்கு கப்பல் செல் வதை இந்தியா விரும்ப வில்லை. இதனாலேயே இச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

---

**கல்விக்...**

(1ஆம் பக்கத் தொர்டர்ச்சி)

அம்சங்களும் சகல துறைகளி லிருந்தும் திரட்டப்படும்.

பாராளுமன்ற ஆலோ சனைக்குழு மூலமாகவும்இதற் கான கருத்து பெற்றுக்கொள் ளப்படவுள்ளது.

இந்த விபரங்களைத் திரட் டும் போது இளைஞர்களின் விரக்திக்குரிய காரணிகளை யும் இக்குழு ஆராயவுள்ளது.

---

**6 வது திருத்த**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்புகிறோம். இவ்வாறு ஈரோஸின் வெகுஜன அணி யான ஈழவர் ஜனநாயக முன் னணி பத்திரிகைக ளுக்கு விடுத்த செய்தி அறிக் கையில் தெரிவித்துள்ளது.

இக்கால அவகாசத்தை அர சும், எதிர்க்கட்சிகளும் பயன் படுத்தி தமிழ் பேசும் மக்க ளின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்க முன்வர வேண்டும் என்றும், எந்த விசுமான முன் நிபந்த னைகளுக்கும் இடமளிக்காத வகையில் அரசியல் அமைப் பில் 6-வது திருத்தத்தைநீக்கி தமிழ் பேசும மக்களின் ஜன நாயக அரசியல் செயற்பாடுக ளில் நம்பிக்கை கொள்ளத் தக்க சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவ்வறி க்கை கூறுகிறது.

---

**உ. அ. அதிபருக்கு**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நடமாடும் செயலகம் காரணமாக தற்கா லிகமாக இவ்வசதி அளிக்கப் பட்டுள்ளது.

தரைமார்க்கமாக இணைப்பு வழங்குவதற்கு சுமார் இரண்டு லட்சம் ரூபா நிதி தேவைப்ப டுவதாக பிராந்திய தொலைத் தொடர்புகள் பொறியியலா ளர் திரு பி இராஜேஸ்வரன் தெரிவித்தார். (37)

---

**பிரபா . .**

1 ஆம் ப்க்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டுப் புதிய தேர்தலில் விடுதலைப் புலி களின் மக்கள் முன்னணி போட்டியிட்டு, மக்கள் அங்கீ காரம் பெற்று, ஸ்திரமான ஆட்சி நிர்வாகத்தில் அமைந்த பின்னரே இரு தலைவர்களும் சந்தித்துப் பேசுவது நியாய மும், சாத்தியமானதுமாகு மென விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்நிலையில் தலைவர் பிரபாகரனும், ஜனாதிபதி பிரேமதாசாவும் விரைவில் சந்தித்துப் பேசுவதற்கான சாத்தியங்கள் இல்லையென்று அமைச்சர் ஹமீதிடம் விடு தலைப் புலிகள் அறிவித்து விட்டதாகவும் தெரியவரு கிறது.

---

**இலங்கைத்...**

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தச் சட்டம் நீக்கும் மசோதாவிற்கு ஆதரவு அளிப் பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேரம் பேசுகின்ற தென்றும், இத்திருத்தச் சட் டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வாக்களித்தால் வட க்கு-கிழக்கு மாகாணத்தையே மறந்துவிட வேண்டும் என வும் தெரிவித்தார். ஆனால் முஸ்லிம் மக்களுக்கு சில பிரச் சினைகள் உண்டுதான் என்றா லும் அதற்கு இது தீர்வா காது எனவும் தெரிவித்தார்.

மேலும் இவ் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவ தற்கு எதிரான தமிழ் குழுக் கள், முஸ்லிம் குழுக்கள் அனைவரும் துரோகிகள் என் றும். அவர்கள் வடக்கு-கிழ க்கு மாகாணத்தை கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது என்றும் தெரிவித்தார் மேலும் இத் திருத்தச் சட்டத்தை நீக் குவதற்கு எதிராக சிங்களத் தலைவர் சிலர் செயற்படுவ தாகவும் தெரிவித்தார்.

---


யேனும் காண்பவர்கள் தயவு செய்து P. சுத்தா னந்தன் செம்பியன் லேன் கொக்குவில் அல்லது S. P. S போக்குவரத்து சேவை 27 விக்டோறியா வீதி யாழ்ப் பாணம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும் தகவல் தரு பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(R/340)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**அண்ணாமலை சங்கரப்பிள்ளை**

(A. S. AKURESSA)

மண்ணில் 24. 04. 1933 — விண்ணில் 08. 05. 1990

எம்மையெல்லாம் அன்போடும், பண்போடும் வளத் தோடும் வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டீர்களே! இனி எமக்கு யார்தான் துணை. எங் கட்கு தோன்றாத் துணையாக நின்று வழிநடாத்த இறைவனை வேண்டுகிறோம்· உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!

எங்கள் அன்புத்தலைவரின் ஈமக்கிரியையில் நேரி லும், அனுதாபச் செய்திகள் மூலமும் பங்குகொண்ட அனைவர்க்கும் நாங்கள் நன்றி கூறுவதுடன் 06.06.1990 புதன்கிழமை காலை 6.30 மணிக்கு வேலணை வெள் ளைக் கடற்கரையிலும் 07. 06. 1990 வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு இல்லத்திலும் முறையே நடை பெறவுள்ள அந்தியேட்டி, ஆத்ம சாந்தி கிருத்தியங்க ளில் பங்குபற்றுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

''திருவேரகம்''
வேலணை வடக்கு,
வேலணை – 5.

இங்ஙனம்
மனைவி, மக்கள்.

(R/337)

---

## மரண அறிவித்தல்

அமரர்

**திரு. கந்தசாமி நடேசபிள்ளை**

**இளைப்பாறிய மக்கள்வங்கி, (கன்னாதிட்டி) உத்தியோகத்தர்.**

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலி தெற்கை வதிவிடமாகக் கொண்டவருமான அமரர் திரு. கந்தசாமி நடேசபிள்ளை (இளைப்பாறிய உத்தியோகத்தர், மக்கள் வங்கி, (கன்னாதிட்டி) நேற்று 5. 6 90 சிவபதம் அடைந்தார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), காலம் சென்ற துஷியந்தி (சுகி), குலதினி (அ. இ. கல்லூரி மாணவி), சிவேந்திரனின் (சிவே) அன்புத் தந்தையும், சபாரட்ணம் (முருகன் சயிக்கிள் வேக்ஸ் மாவை), பத்மாவதி, கனகராசா (இ போ. ச.) ஆகியோரின் சகோதரனும், அமரர் கதிரவேலு, திருமதி தங்கம்மா கதிரவேலுவின் மூத்த மருமகனும், அமரர் நடேசலிங் கம், திருவாளர்கள் பரமலிங்கம் (கார் தரகர்), பஞ்ச லிங்கம் (பேர்லின்), பாலசிங்கம் (நீர் ப. நோ. கூ. சங் கம்), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), காலம் சென்ற சண்முக லிங்கம் குணல சுமி. றேவதி (ஜேர்மனி), சந்திரமதி, இராஜேஸ்வரி, திருமதி கனகாம்பிகை சபாரட்ணம், திருமதி கனகராசா சகுந்தலாதேவி, சிவராஜா (சிவா கபே, தெல்லிப்பழை) ஆகியோரின் மைத்துனரும், திரு மதிகள் நடேசலிங்கம் சரஸ்வதி, தங்கராணி பரமலிங் கம், கலாவதி பஞ்சலிங்கம், உமாதேவி பாலசிங்கம், சுந்தரலிங்கம் விஜயசேன, திரு சத்தியமூர்த்தி [illegible] தானை தபாற்கந்தோர்), தியாகராஜா, தயா[illegible]தன் (யாழ் தொ நு கல்லூரி) ஆகியோரின் சகலனு[illegible]வர் அமரர் கந்தசாமி, திருமதி கந்தசாமி சின்னத்தங்கத் தின் மகனுமாவார். அன்னாரின இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 10 00 மணிக்கு [illegible]வேலி இந்து மயானத்தில் நடைபெறும் என[illegible]ோர் உறவினருக்கு அறியத்தருகின்றோம்.

இராச வீதி,
அச்சுவேலி.

தகவல்: க. கனகராசா

(R/339)

---


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.